தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்.

தொகுதி VII. | ருதிரோத்காரி ஹூ பங்குனிமீ | பகுதி 12

கம்பளிப்பூச்சி

Caterpillar

ஸ்ரீ. P. N. அப்புஸ்வாமி, B. A., B. L., எழுதியது.

கம்பளிப்பூச்சிகள் எனப்படும் மயிருள்ள புழுப் போன்ற பூச்சிகள் மழைக்காலத்தில் திடீரென்று உண்டாகிச் சோளம், கம்பு, கடலை, பயறு முதலிய பயிர்களைக் கெடுத்துவிடுகின்றன.

இவை வயிறு நிறையப் பயிரைத் தின்று தொலைத்துப் பிறகு ஒரு கொட்டையைப்போல் சுருண்டு உருமாறி ஒரு வருஷம் வரை மண்ணோடு மண்ணாய்க் கிடக்கும். அப்பொழுது இவற்றைப் பார்த்தால் இவை உயிருள்ள பிராணிகளென்று ஒருவராலும் சொல்லமுடியாது. ஏதோ வேப்பங்கொட்டையோ அல்லது பெருச்சாளிப் புழுக்கையோ என்றே சொல்லும்படி தோன்றும்.

ஆயினும் மறுவருஷம் மழை பெய்ததும் இவை மறுபடியும் உருமாறிப் பூமியைத் துளைத்து மேல் வந்து அழகிய வரியுள்ள உடம்பையும் மெல்லிய சிறகுகளையும் உடைய வெண்ணிறப் பூச்சிகளாய்க் கிளம்புகின்றன. இந்தப் பூச்சிகளைப் பட்டுப்பூச்சிகள், வண்ணாத்திப்பூச்சிகள் என்றெல்லாம் சொல்லுவதுண்டு. முதல் மழை பெய்ததும் இவை புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதுபோல் ஏராளமாய்ப் புறப்பட்டு அக்கம் பக்கத்திலுள்ள பயிர்களின்மீது ஓடி ஆடி உட்கார்ந்து விளையாடி வருவது கண்ணுக்கு மிகவும் அழகாகவே தோன்றும்.

ஆனால் பகட்டாக நடிக்கும் ஆடவர் பெண்டிரைப் போல் இவையும் தீக்குணமுள்ளவை. எப்படியெனில் இப்பூச்சிகளின் பெட்டைகள் மேற்கூறிய கம்பு முதலிய பயிர்களின் இலைகளின் அடியில் ஏராளமாய்த் தமது முட்டைகளை இட்டுவிடுகின்றன. ஒரு பூச்சி ஒரு தடவைக்கு ஐநூறு முட்டைகள் முதல் ஆயிரத்து ஐநூறு முட்டைகள் வரையில் இடும். இம்முட்டை ஒவ்வொன்றும் பொரிந்து ஒவ்வொரு கம்பளிப்பூச்சியாகும். கம்பளிப் பூச்சியைப் போல் பசி பகாசுரனுக்கும் கிடையாது. கம்பளிப் பூச்சிகள் சிறியவே யாயினும் அவற்றின் தொகை அதிகமாயிருத்தலால், அவை ஒவ்வொன்றும் துளி துளியே சேதம் விளைக்கினும், மொத்தச் சேதம் அதிகமாகிவிடுகிறது.

ஆகையால் முட்டையாயிருந்து (Egg), அருவருக்கத்தக்க கம்பளிப்பூச்சியாகி (Grub), உருத்தெரியாக் கொட்டையாகி (Chrysalis), அழகிய பட்டுப்பூச்சி (Butterfly:Moth) யாகும் இப்பூச்சி மனிதருக்கு உணவாகும் பயிரை அழிப்பதால் பிராணதாரப் போராட்ட முறையில் மனிதர் தம் இனத்தைக் காக்கவேண்டி அப்பூச்சியைத் தொலைக்க முயலுவது அவசியமாகிறது.

ஆகவே எவ்வாறு எப்பொழுது இவற்றைத் தொலைப்பது எளிது என்பதை ஆராய்ந்து ஒரு முறையைக் கண்டு பிடித்திருக்கின்றனர்.

இலைகளின் அடிப்புறத்தில் ஆயிரக்கணக்காய் ஒட்டிக் கொண்டிருக்கும் முட்டைகளைத் தொலைப்பது எளிதல்ல. ஏனெனில் அவை அளவில் மிகச் சிறியன. ஒவ்வொரு செடியின் இலையையும் திருப்பிப்பார்த்து அதிலிருந்து முட்டைகளை அகற்றி அவற்றைச் சாக அடிப்பது மிகவும் கஷ்டமான காரியம்; முடியாதென்றே சொல்லவேண்டும்.

அடுத்தபடி அவை கம்பளிப் பூச்சியாக உருமாறி வயிறார உண்ணும்போது அவற்றைத் தேடிப் பிடிப்பது சற்று எளிதாயினும், அதுவும் மிகவும் தொந்தரவான வேலையே. இலை இலையாய்ப் பூச்சியைத் தேடிப் பிடித்துக் கொல்லுவது எளிதல்ல, மேலும் கூலியும் அதிகமாகும்.

மூன்றாவது கொட்டை உருக்கொண்டிருக்கும் பூச்சிகளை அறிந்து கொள்ளுவதே கஷ்டமாதலால் அப்பொழுது அவற்றைக் கொல்லுவதும் எளிதான காரியமல்ல.

ஆகவே நான்காம் உருவமாகிய பட்டுப்பூச்சி உருவம் ஒன்றுதான் மீறுகிறது. ஆனால் ஒட்டிக்கிடக்கும் முட்டையையும், ஊர்ந்து நகரும் கம்பளிப்பூச்சியையும் கொல்ல முடியாதவர் ஓடிப் பறக்கும் பட்டுப்பூச்சியை எப்படிப் பிடித்துக் கொல்ல முடியுமென்று கேட்கலாம்.

இப்பட்டுப் பூச்சிகளுக்கு விளக்கைக் கண்டால் அதனிடம் போய்ச் சேரவேண்டுமென்ற ஆவல் எங்ஙனமோ உண்டாகின்றது. அது ஏனென்பது இன்னும் நிச்சயமாகத் தெரியவில்லை. இந்த ஆசையைக்கொண்டே பட்டுப் பூச்சிகளைத் தொலைக்க மனிதன் தனது சிறந்த அறிவால் ஏற்பாடுகள் செய்திருக்கிறான்.

கம்பு முதலிய பயிர்கள் செய்யுமிடங்களில் அநேக இடங்களில் பயிர் மட்டத்துக்கு மேல் வெகுதூரத்திலுள்ள பூச்சிகளுக்கும் தெரியும்படி லாந்தற் பொறிகளை வைக்கிறான். காற்றில் அணையாது எரியும் ஒரு விளக்கும், அதன் கீழ் இரண்டு மூன்று அடி சதுரமும் மூன்று அங்குல ஆழமும் உள்ள, மண்ணெண்ணெய் கலந்த தண்ணீர் நிறைந்த ஒரு தட்டும் தான் லாந்தற் பொறி எனப்படும். இந்த விளக்கில் வெறும் மண்ணெண்ணெய்யோ அல்லது தேங்காய் எண்ணெய்யையும் மண்ணெண்ணெய்யையும் கலந்தோ எரிக்கலாம். தனித் தேங்காய் எண்ணெய் விளக்கெண்ணெய் முதலியவற்றை எரித்தால் போதிய அளவு ஒளி வீசிப் பூச்சிகளை அழைப்பதில்லை.

இந்த விளக்கைக் கண்டதும் பூச்சி வெகு தூரத்திலிருந்து ஆவலுடன் விளக்கை நோக்கி வேகமாய்ப் பறந்து வரும். ஒளியை ஊடுருவிச் செல்லவிடும், விளக்கை அணையாது பாதுகாக்கும், கண்ணாடியை அது கவனியாது வேகமாய் வருவதால் அக் கண்ணாடியின் மீது வந்து முட்டிக்கொள்ளுகிறது. தாக்கின்விசையால் கீழே விழுகிறது. லாந்தலின் அடியில் இருக்கும் மண்ணெண்ணெய் நீரில் விழுந்து இறகு நனைந்து மூழ்கிப் பரிதாபமாக மாளுகிறது.

ஒரே இரவில் ஆயிரக்கணக்கான பூசசிகளை இவ்வாறு கொன்றுவிடலாம். இதற்குச் செலவும் அதிகமில்லை. மேல்பார்க்க ஆளும் தேவையில்லை. ஆனால் ஒரு கிராமத்தில் ஒன்றிரண்டு குடியானவர்கள் தமது நிலங்களில் மட்டும் இவ்வாறு செய்தால் போதாது. கிராமத்திலுள்ள குடியானவர்கள் எல்லாரும் முதல் மழை பெய்த உடன் தமது நிலங்களில் அநேக இடங்களில் மூலைக்கு மூலை பயிரின் மட்டத்துக்கு மேல் இப் பொறிகளைப் பத்துப்

பன்னிரண்டு நாளைக்கு வைத்தால் இப் பூச்சிகள் எல்லாம் விளக்கில் பட்டு நீரில் மூழ்கி இறந்து போகும்.

ஒவ்வொரு தாய்ப் பூச்சியும் மேலே சொன்னபடி 500 முதல் 1500 வரை முட்டையிடக் கூடுமாதலால் ஒரு பட்டுப் பூச்சியைக் கொல்லுவது கிட்டத்தட்ட ஆயிரம் கம்பளிப் பூச்சியைக் கொல்லுவதற்குச் சமமென்று சொல்லலாம். இவ்வாறு தமக்குச் சேதம் விளைக்கவல்ல பூச்சியைக் குடியானவர் எளிதில் தொலைத்து விடலாம்.

கீழ்ப்படியான பிறவி அறிவையே (Instinct) உடைய அற்பப் பிராணியாம் பட்டுப் பூச்சியை மனிதன் தனது சிறந்த விவேகத்தால், தன் இனத்தைக் காப்பாற்றும் பொருட்டு, தொலைக்க முயலுகிறான்.

தபால் தலைகள்

Postage Stamps.

ஸ்ரீ. வே. நாராயண ஐயர், M. A., M. L., எழுதியது.

நூதனமாக ஒருவிஷயம் கண்டுபிடிக்கப்பட்டால் உடனே சிலர் இது வெகு வருஷங்களுக்கு முன்பே இருந்தது என்று ஸ்தாபிக்கத் தொடங்குகிறார்கள். அவ்வாறே, லெ வியூ நயூப் (Le Vieux Neuf) என்ற புஸ்தகமெழுதிய போர்னீர் (M. Fournier) என்பவர், லூயி XIV அரசர் காலத்திலேயே தபால் தலைகள் 'பாரிஸ்' நகரில் உபயோகப்பட்டு வந்தன என்று சொல்கிறார். வேறொரு பிரன்ஞ்சு ஆசிரியர் தபால் தலைகள் முதன்முதல் 1653-ம் வருஷத்தில் உபயோகிக்கப்பட்டன என்று நிரூபிக்கிறார். அந்த வருஷத்தில் ஆகஸ்டு மாதம் 16உ யன்று டி வெலயர் (M. deVelayer) என்பவர், ராஜாங்க அனுமதியின்பேரில், சுயமாய் தபால் கச்சேரி நடத்த உத்தேசித்து, "பாரிஸ் நகரத்திற்குள் ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்கு காகிதங்கள் எழுதியனுப்ப விரும்புவோர், தபாற்கூலி செலுத்தியதற்கு அடையாளமாகச் சீட்டுகள்வாங்கி தங்கள் காகிதங்களில் ஒட்டி அனுப்பினால், அக்காகிதங்கள் உடன் விலாசப்படி கொடுக்கப்படும்" என்று விளம்பரம் செய்தார். அந்தச் சீட்டுகள் தற்கால தபால்தலைகளோடு பல விதங்களில் ஒத்திருந்தன. அவைகளிலும் அரசனுடைய சித்திரம் அமைக்கப்பட்டிருந்தது. கடைகளிலும் வேறு சில இடங்களிலும் அவைகள் விற்கப்பட்டன. ஆகையால் முன்னதாகவே அவைகளை வாங்கி வைத்துக்கொள்ளலாம். தெரு மூலைகளில் சீட்டுகள் ஒட்டிய காகிதங்களை இடுவதற்குப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. அந்தப் பெட்

டிகளை பிரதிதினம் மூன்று தடவை திறந்து காகிதங்களை எடுத்துச்செல்ல ஆட்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

ஆயினும், தற்காலத்தில் நடைபெறும் தபால் முறைகளைத் துவக்கினோர் டி வெலயா (M. deVelayer) என்பவரைப்பற்றியும் அவர் தபால்கச்சேரி நடத்தியதையும் யாதும் அறிந்திலர். பிரஞ்சுக்காரர்களுக்கே டி வேலயர் என்று ஒருவர் இருந்ததும், அவர் சிறுகாலம் தபால் நடத்தியதும் மறந்து போயிற்று.

பின்பு, சுமார் 1830-ம் வருஷத்தில் சார்ல்ஸ் விட்டிங் (Mr. Charles Whitting) சார்ல்ஸ் நைட் (Mr. Charles Knight) டாக்டர் க்ரே (Dr. Gray) ஆகிய மூவரும் கடிதங்களுக்கு தபால் கூலியை தபாலாபீசுகளில் வசூலிப்பதுபோலன்றி, முன் பணம் செலுத்திக் குறியிட்ட காகிதங்களை வாங்கி அவைகளில் பத்திரிகைகளைச் சுற்றியனுப்புவது சமாசாரப் பத்திரிகைக்காரர்களுக்கும் தபாலாபீசுகளுக்கும் சௌகரியமாயிருக்கும் என்பதை எடுத்துக் காட்டினார்கள். முன்பணம் செலுத்திச் சீட்டுக் காகிதங்கள் வாங்கி உடயோகிக்கலாம் என்ற சௌகரியத்தைத் தாமே முதலில் விளக்கியதாகவும், 1834-ம் வருஷத்தில் இது விஷயமாய் சர்க்கார் அதிகாரிகளுக்கு எழுதியதாகவும், டாக்டர் க்ரே சொல்லியிருக்கிறார்.

ஆயினும் தபால் விஷயமாய் துண்டுப்பத்திரிகைகள் எழுதிவிடுத்துப் பலவாறுமுயன்ற ரோலண்ட் ஹில் என்பவர் 1837-ம் வருஷம் எழுதியவற்றிலும் தபால் தலைகளைப் பற்றிய தொன்றும் காணப்படவில்லை. தபாற்கூலியைக் கச்சேரியில் முன் பணமாகவே வாங்கி வந்தார்கள். பின்பு அவர் எழுதிய பத்திரிகைகளில் முத்திரையிட்ட தபாற் பைகளை உடயோகிக்கலாமென்று எடுத்துக்காட்டியதின் பயனாக, எளிதில் பிறர் போடமுடியாதபடி சித்திரவேலை

மிருந்த முத்திரை யொன்று வரைந்து கொடுப்பவரில் உயர்ந்தவருக்கு 100 பவுன் 200 பவுன் என்று இரண்டு பரிசுகள் அளிப்பதாக சர்க்கார் அறிவித்தனர். அதன் பயனாக, முல்ரெடி (Mr. Mulready) என்பவர் ஒரு தபாற் கூடு செய்தனர். அதில் எழுதப்பட்ட சித்திரம் அழகிய தாயினும், மேல்விலாசம் எழுதுவதற்குக்கூட இடமில் லாமல் வரையப்பட்டிருந்ததால், அது அதிக காலம் பழக் கத்தில் உலவி வரவில்லை.

பிறகு, சர்க்கார் தபால்தலை ஒன்று சரியாய் வரைந்து கொடுப்பவனுக்கு 500 பவுன் பரிசு என்று விளம்பரம் செய்தார்கள். ஆயிரம்பேர் அதற்கு முன்வந்தார் என் றாலும், ஒருவருடைய படமாவது திருப்திகரமாய் இல்லை. தபால் கச்சேரி உத்தியோகஸ்தர்களே இராணியின் தலை எழுதி, கறுத்த மையில் அச்சிட்டார்கள்; அதுவும் பார்ப் பதற்கு அழகாய் இருக்கவில்லை. பிறகு, சிவந்த நிறமாக மாற்றினார்கள். வெவ்வேறு விலைகள் கொண்ட தலைகள் வேவ்வேறு நிறங்களில் அச்சிடப்பட்டன.

இவ்வாறு இங்கிலாந்தில் சுமார் எட்டு வருஷம் வரை நடந்த பின்னரே, மற்றைய தேசங்களிலும் இவ்வழி பரவிற்று. 1848-ம் வருஷத்தில் பிரஞ்சுதேசத்திலும் பிறகு வேறு தேசங்களிலும் இவ்வழக்கம் பரவுதலாயிற்று. காலக்கிரமத்தில் துருக்கி அரசனான சுல்தானும், மகம் மதிய வழக்கத்தை மீறி, தன் படத்தை தபால்தலைகளில் அச்சிடலாம் என்று சம்மதித்தனன்.

இப்பொழுது சாதாரணமானதென்று தோன்றும் 'தொளையிடுகருவியே' (Perforating machine) தபால் தலைகளை நிலைபெறச் செய்தது. அதற்குமுன் ஒவ்வொரு தபால் கச்சேரியிலும் தபால் தலைகள் அச்சிட்ட காகி தத்தை கத்தரித்து ஒட்டுவதற்காக, கத்திரிக்கோல் ஒன்று

ஜன்னலோடு சங்கிலியால் கட்டி வைக்கப்பட்டிருந்தது. இந்தக் கத்திரிக்கோல் கிடையாமல் கத்தியால் அறுத்து ஒட்ட முயன்று கஷ்டப்படுவோரும் உண்டு. இவ்விதக் கஷ்டங்களெல்லாம் ஹென்ரி ஆர்ச்சர் (Mr. Henry Archer) என்பவர் செய்த கருவியால் நீங்கின. 'தொளையிடு கருவி' தலைகளை வெவ்வேறாகப் பிரித்துக் கிழிப்பதற்கு அநுகூலமாய் மேல் கீழாயும் இடவலமாயும் ஒழுங்காய்த் தொளையிடுகிறது. தபால் தலைகள் பல அடங்கிய காகிதத்தை மடித்து, சிறு பையிலோ புஸ்தகத்தின் இடையிலோ வைப்பதும் இதனால் எளிதாகின்றது. இந்தக் கருவியை, பார்லிமெண்ட சபையின் கம்மிட்டியார் சிபார்சின்பேரில் ஆர்ச்சரிடமிருந்து, 4000 பவுன் கொடுத்து, 1852-ம் வருஷத்தில், சர்க்கார் விலைக்கு வாங்கிக்கொண்டார்கள்.

இதற்குப் பின்னர் மேன்மேலும் அழகு பொருந்திய தபால் தலைகளும், தபால் முத்திரைகளும் உண்டாக்கப் பட்டன.

வியாபாரிகள் சௌகரியத்துக்கென்று பெரிய அளவுள்ள கவர்களும், எளியவரும் தபால் அனுப்பச் சௌகரியமாயிருக்கும்படி கார்டுகளும் உண்டாக்கப்பட்டன.

இப்பொழுது மிகவும் சௌகரியமாக பணப்பையில் போட்டுக் கொள்ளும்படி சிறிய அளவுள்ள புஸ்தகங்களாகத் தபால் தலைகள் விற்கப்படுகின்றன.

தாய் மொழி.*

The Mother Tongue.

கும்பகோணம் டவுன் ஹை ஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்,

ஸ்ரீ. ஊ. சா. வேங்கடராம ஐயர் எழுதியது.

மாந்தர்காள், அருமை மாந்தர்காள், நாட்டை
இழிதக வகற்றி இன்புறச் செய்வான்
முன்னேற் றுவமென் றுன்னியர் முயன்று
வளம்பல பெருக்கற் குளம்பரிந் துழைக்கும்
மாந்தர்காள், அதனுக் காந்துணை கேளீர் :
தாய்மொழி தன்னைத் தலைசிறந் தொளிரச்
செய்தலே எல்லாச் சிறப்புறு தற்கும்
ஆதிகா ரணமாம் ; அன்றிமற் றெவையும்
தீமையைப் போக்கும் திறம்பெறா ஆகும்:
ஆதலின், நும்தம் மேதகு கருத்தை
முற்றுவித் தற்குச் சற்றும் பிந்தாது
உம்மொழி தன்னைச் செம்மையின் ஆய்ந்தே
போற்றுமின் ; விரிவாய்ச் சாற்றுநும் கலைநூல்
ஆதிய பலவாம் அறிவுநூல் தம்மை,
ஏனைத் தேசத் தெவ்வெவ் நூல்கள்
கொள்கைகள் சிறந்தன, அவ்வவை கொள்வான்
மொழிபெயர்த் துமதுயர் மொழியை வளர்மின்:
அரசியல் துறையிலும் அரசவை தன்னிலும்
பயிலச் செய்மின்: பரப்புமின் உலகில்:
என்பதாம். இம்மொழி மணியைத் தன்புகழ்க்கு
ஏற்றவா றுயர்த்தற் கிசைந்துமுன்
ஏற்றுமின்: எல்லா நலமும்வந் தெய்துமே.

---

* இது, ஹிந்தி பாஷையில் பாரதேந்து ஹரிச்சந்திர என்ற ஒரு பெரியார் எழுதிய நிஜபாஷா என்ற தலைப்பில் வரும் சிறு பகுதியின் கருத்தைத் தழுவி எழுதப்பட்டது.

மதிப்புரை.

Review.

'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்'

கம்பநாடர்—[ராமநாதபுரம் ஜில்லா, காரைக்குடியில் கம்பநாடர் காரியாலயம் மானேஜர் வெளியிடும் ஒரு மாதாந்த கம்பராமாயணப் பத்திரிகை. வருஷச் சந்தா ரூபாய் ஐந்து.] மாதம் ஒருதரம் வெளிவரும் இப்பத்திரிகை எடுத்துக் கொண்ட விஷயம் ஆறு வருஷத்தில் முடிவாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை ஐந்து பகுதிகள் வெளிவந்திருக்கின்றன. ஒவ்வொரு பகுதியிலும் கம்பராமாயண விஷயமானது (1) கம்பரும் வான்மீகரும் (2) கம்பராமாயண ஆராய்ச்சி (3) கம்பராமாயணக்கவி (4) கம்பராமாயண வசனம் என்னும் நான்கு தலைப்புக்களின் கீழ் பகுக்கப்பட்டிருக்கிறது. இந்நான்கு பாகங்கள் ஒவ்வொன்றையும் தனியாகப் பின்னால் பைண்டு செய்து கொள்வதற்கு அனுகூலமாக, ஒவ்வொரு பாகத்திற்கும் தனித்தனியே பக்க எண்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் :—

கம்பரும் வான்மீகரும் என்பது இராமாயணத்தில் கம்பர் வான்மீகரை எங்கெங்கே கதை வருணனை முதலியவற்றில் பின்பற்றுகிறார் என்பதையும், எங்கெங்கே அவர் கருத்தோடுமாறுபடுகிறார் என்பதையும், இவற்றால் உண்டாகும் நயங்களையும் காட்டுகிறது. இப்பகுதியில் கம்பராமாயணத்தை மட்டும் படித்தவர் வான்மீகத்தின் சுவையை அறிவதும், வான்மீகத்தைப் படித்தவர் கம்பரது கவிச்சுவையை அறிவதும் ஆகிய இரண்டு பயன்கள் ஏற்படுகின்றன.

கம்பராமாயண ஆராய்ச்சி என்பது கம்பரது சரித்திரம், காலநிர்ணயம், அவரது சமயக்கொள்கைகள் அலங்காரம் முதலிய கவிதா சக்திகளிலுள்ள திறமை முதலியவற்றைக் காட்டுகிறது. கம்பரது கவியின் முழுச் சுவையையும் பெறுதலே இப்பகுதியின் பயனாகும்.

கம்பராமாயணக் கவி என்பது கம்பராமாயணம் முழுவதையும் ஒவ்வொரு கவியாக எடுத்துக்கொண்டு அதைத் திருத்தமான பாடம், பொழிப்புரை, குறிப்புரை என்பவற்றோடு வெளியிடுகிறது. நமது நாட்டிலக்கியங்களுள் மிகவும் சிறப்புவாய்ந்த கம்பராமாயணத்துக்கு இது வரை உரையோடு கூடிய திருத்தமான பதிப்பு ஒன்று இல்லாதிருந்த குறையை இப்பகுதி நீக்குவதாகும்.

கம்பராமாயண வசனம் என்பதில் கம்பராமாயணத்தில் ஆதிமுதல் எல்லாச் செய்யுள்களையும் வரிசையாக எளிய வசனரூபமாக எழுதியிருக்கிறது. செய்யுளைப் படித்து மகிழ இயலாதவர் இவ்வசனத்தைப் படித்து ஒரு சிறிது கம்பரது கவித்திறமையை அறிந்து மகிழ்தல் கூடும்.

இருமொழிப் பயிற்சியுள்ள ஸ்ரீ. மு. வே. கோவிந்தராஜ அய்யங்காரவர்கள் கர்ண பரம்பரையாகவே வழங்கி வரும் கம்பராமாயண ஆராய்ச்சி விஷயங்கள் பலவற்றைத் தாம் கற்றுப் பிரசங்கித்து வருவதோடு நிற்காமல், எக்காலத்தும் நிலை நிற்கும்படி புத்தகரூபமாய் இக் கம்பநாடர் வழியாக வெளியிட்டு வருவது மிகவும் பாராட்டத் தக்கது. அவர் எடுத்துக் கொண்ட இப் பெரும் முயற்சியை இனிது முடிப்பாராக; நம்மனோர் அனைவரும் அவரது பத்திரிகையை வாங்கிப் படித்து அவர்க்கு ஊக்கமூட்டி அவரது காரியம் நன்கு நிறைவேறுதற்கு வேண்டிய உதவி புரிவாராக.

—அ.

ஸர் ஐஸாக் ந்யூட்டன்
Sir Isaac Newton

ஸ்ரீ B.A., பாஷ்யமையங்கார் B.A., L.T., எழுதியது.

(240-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இதற்கு முன் கெப்ளர் என்பவர் கிரகங்கள் ஒன்றைச் சுற்றி யொன்று செல்லும் வகையைமட்டில் கண்டுபிடித்தார் ஆயினும் அவை அங்ஙனஞ் செல்வதற்குக் காரணமின்னதென்று அவர் அறிந்தவரல்லர். க்ரேக்கர் நாள்முதல் அராபியவாராய்ச்சி யறிஞரும், டாலமி, கோபர்னிகஸ், டைகோ விற்பன்னர் பலரும் ஆராய்ந்தும் உண்மையறியாமல் மயங்கி யிருந்த அருமையான விஷயத்தைக் கெப்ளர் ஷம் விடா முயற்சியாற் கண்டறிந்தாரேனும், அவர் தமது வேலையை அரைகுறையாகவே விட்டுச்சென்றார். கிரகங்கள் யாவும் ஒரே முனையைப்பற்றி நின்று சூர்யனைச்சுற்றி வட்டாகாரமாய்ச்சுழல்வதையும், அவை செல்லும் நிலப்பரப்பு காலத்திற்குத்தக ஒரே தன்மைப்பட்டிருத்தலையும், கெப்ளர் அறிந்ததோடு, கிரகங்கள் செல்லுந்தூரங்களுக்கும் அச்செலவுக்குரிய பருவகாலவளவுக்குமுள்ள தொடர்பையும் ஆறு முதன்மையான கிரகங்களைக்கொண்டு ஆராய்ச்சி செய்து அறிந்தார். கெப்ளர் கிரக சலன முறையை உள்ளவாறு கண்டறிந்தனரே யல்லாது அதற்குக் காரணத்தை ஆராய்ந்தாரல்லர். கிரககதிகாரணத்தை ஆராய மேற்கொண்டு டேக்கார்டே சூர்யனின்றெழுந்த கிரணங்களே மற்றக்கிரகங்களை ஓரளவிற் பிணித்துச் சூர்யனைச் சுற்றிச் செல்லும்படி செய்கின்றனவென்று தீர்மானித்தார். அவர் கூறிய காரணத்தை அக்காலத்தவர் நன்றென்று ஏற்றுக்

கொண்டனரேனும் ந்யூட்டனின் மனம் சமாதானமடைய வில்லை. கலிலியோ கண்டுபிடித்த பொருளியக்க நியதிகளோடு டெகார்டின் முடிவுகள் முரண்படுவதை ந்யூட்டன் அறிந்தார். கலிலியோவாற் கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்களைத்தாமும் ஆராய முற்பட்டு ந்யூட்டன் பொருள்களின் சலன விதிகளைப் பரீக்ஷித்தறியலானார். தான் கண்கூடாகக்கண்ட வற்றை நன்காராய்ந்து காரண காரியமுறையால் வகைப்படுத்திச் சோதித்தபின்னரே ந்யூட்டன் ஒரு விஷயத்தைப்பற்றி முடிவு கட்டுவது வழக்கம். கலிலியோ கண்டுதேர்ந்தவற்றையே ந்யூட்டன் தெளிவாகவும் திருத்தமாகவும் சுருக்கி வரைந்துள்ளாராதலின், அவை அவர் பெயராலேயே ந்யூட்டன்கண்டுபிடித்த பொருட்சலன விதிகளெனப் பெயர் பெறுபவாயின. அவ்விதிகளை ஒவ்வொன்றாய் ஆராய்வோம்.

முதலாவது, ஒரு வஸ்துவின் சலனத்தை மாற்ற வேண்டுமோயின் சக்தி இன்றியமையாததாகும் ; அதாவது வேறொரு சக்தியும் இல்லையாயின் சலனத்தோடு கூடியிருந்த ஒருவஸ்து அதேவேகத்தோடும் அதே திசையில் நேராகச் சென்றுகொண்டிருக்கு மென்பதே ந்யூட்டன் கண்டறிவித்த முதல் விதியாகும். ஒரு வஸ்துவை அதன் போக்கிலேயே விட்டுவிடு ; அதன் கதிக்குத் தடை வேறொன்றுமில்லாதிருப்பின் அது எப்போதும் சென்று கொண்டேயிருக்கும். வெட்டவெளியில் கிரகங்கள் செல்வது ஓரதிசயமன்று. கிரகம் வளைந்து சுற்றுகையில் அதன் கதியைக் குறைக்காமலிருத்தற்குச் சக்தி அவசியமேயன்றி அதன் சலனத்திற்கு ஒரு வித சக்தியும் வேண்டியதில்லையென்பது இதனாற் பெறப்படும். ஆகவே கிரகத்தின் செலவு வட்டாகாரமாய்த் திசை மாறியபோதிலும் வேகத்தையொட்டியவரையில் ஒரே மாதிரி அமைந்திருக்

கிறது. சலனத்தை நீட்டிப்பதற்குச் சக்தி வேண்டுவ தின்று ; அதனை மாற்றுவதற்கு அவசியமாகின்றது.

இரண்டாவது, சக்தியினால் ஒரு வஸ்து தன் நிலைமா றும்போது அச்சக்தியின் அளவுக்கேற்ப அதே திசையில் அப் பொருளும் வேகத்திலோ திசையிலோ அல்லது இரண் டினுமோ மாறும் என்று ந்யூட்டன் குறிப்பிடுகிறார். கிரகங்கள் செலவு மாறுவது திசையை யொட்டியே யாதலின் ஒரு புறத்திலிருந்து மற்றொரு புறத்துக்கு மாற்றக்கூடிய சக்தியே அவசியமாகிறது. கதிமார்க்கத் திற்குப்பொருந்த நேர்க்கோணத்திற் செலுத்தும் சக்தி யமையாதாகிறது. சலனம் வட்டாகாரமாய் இருக்கும் பக்ஷத்தில் அவ்வட்டத்தின் நடுக்குறிக்கும் வளைவுக்கும் இடையேயுள்ள நேர்க்கோட்டினை யொட்டியே அச்சக்தி இயங்கவேண்டும்.

மூன்றாவது, ஒன்றுக்கொன்று மாறாக இயங்குவ தாகப் புலப்படும் இருவகைச் சக்திகளும் சமவளவினவாய் நின்று வஸ்துவின் போக்கை நிர்ணயிப்பனவாம். தனித்து ஒரே சக்தி அமைந்திருத்தல் இயலாதாகையின் எப்போதும் சக்தி இருதிறப்பட்டே யிருக்குமென்பது இதனால் விளங்கும். நாம் ஒருவகை சக்தியினால் ஒரு வஸ்துவைத் தள்ளுவோமாயின் அச்சக்திக்கெதிரிடை யான பிறிதொரு சக்தி அதில் அமைந்து நமது சக்திக்குத் தடையை உண்டாக்குகிறதென்றே கொள்ளவேண்டும். எதிரிடையா யியக்கும் தடையில்லையாயின் நாம் சக்தியை உபயோகிக்கிறோமெனல் சிறிதும் பொருந்தாது. உன் சக்திக்குச் சமவளவினதாயு மெதிரிடையாயுமுள்ள பிறி தொருசக்தி அப்பொருளில் இருக்கிறது. சுருக்கிக்கூறு மிடத்து ஒரு தொழிலும் அதன் பயனாகிய மற்றொரு

தொழிலும் எப்போதும் சமவளவினமாய் மாறுபட்டே யிருக்கும். உதாரணமாக, பரி பூட்டிய வண்டியைப்பற்றி ஆராய்வோம். மேல்நோக்காய் ஆராய்வோமாயின் அக் குதிரை வண்டியை இழுப்பதற்கு உபயோகிக்கும் சக்திக்குச் சமானமானசக்தியுடன் வண்டியும் குதிரையை இழுக்குமென்று கூறுவது நகைப்பிற் கிடமாகத் தோற்றும். வண்டியோ குதிரை இழுக்கும் வழியே செல்வதை நேரிற் காண்கையில் ந்ட்யூடன் கூற்றை மெய் யென்று கொள்வதெங்ஙனம்? குதிரை முன்னுக்கு இழுக்கிறது; வண்டியும் செல்கிறது. வண்டி பின்னுக்கு இழுக்கப்பட்டால் முன்னுக்குச் செல்வதெப்படி? வண்டி தன்னைத்தானே பின்னுக்கு இழுத்துக்கொள்வதெங்ஙனம் பொருந்தும்; இவ்விதம் எழும் சங்கைகளுக்குச் சமாதான மென்ன? சிறிது ஊன்றி ஆராய்வோமாயின் உண்மை இன்னதென்பது தெள்ளிதின் விளங்கும். சகடமே குதிரையைப் பின்னுக்கு இழுப்பது உண்மையே; ஏனெனில், வண்டி பின்னுக்குச் செல்லும் சக்தியைப் பொருந்திப் பின் அதை முன்னுக்கிழுப்பதற்குக் குதிரை வேண்டுவதில்லையன்றோ? வண்டியின் பின்வேகத்தை ஒடுக்கவேண்டியே நாம் குதிரையைப் பூட்டி வண்டியை முன்னுக்கு இழுக்கச் செய்கிறோம். வண்டியை முன் செல்லவொட்டாது தடுப்பதேயன்றி பின் செலுத்தும் சக்தியொன்று மில்லையாயினும், குதிரை அதை முன்னுக் கிழுப்பதையும் அதனால் வண்டி நகர்வதையும் நாம் காண்கிறோம். ஆகையால் தனித்தியங்கும் இருவேறு பொருள்களினிடத்து இருவகைச் சக்திகள் பொருந்தி யிருத்தலை யறிவார்க்கு மேலெழுந்த ஐயங்களும் அவற்றா லுய வியப்பும் உண்டாகாவாம்.

ந்யூட்டன் கலிலியோ குறையாய்விட்ட அம்சங்களையே பற்றிச் செய்த ஆராய்ச்சிகளே பிற்காலத்து விளங்கிய

பூதபௌதிக நூல்வல்லார்க்கு அரும்பெரும் விஷயங்கள் பலவற்றைத் தெள்ளிதின் விளக்குவனவாயின. ந்யூட்டனின் அருமுயற்சிகள் பலனளியாதிருப்பின் பொருளறிவு நூல் இப்போதடைந்திருக்கும் உந்நத நிலையை அடைந்திரா தென்பது திண்ணம். அவர் இம்மூன்று விதிகளையும் முறைப்படுத்தியபின் வானத்திற் கிரகங்கள் சூர்யனைச்சுற்றி ஓடுவதற்குக் காரணமின்னதென்பதை ஆராய்வாராயினர். அக்காலத்தில் அவர் மனம் வேறு உலக விஷயங்களிற் சிறிதும் செல்லாது தாம் பற்றியிருந்த ஆராய்ச்சியிலேயே அழுந்திக்கிடக்கும். தாம் தமது மதிநுட்பத்தாலாராய்ந்த விஷயங்களைத் தொகுத்து நூலாகப் பிரசுரஞ்செய்திருந்தாராயின் அக்காலத்திலேயே அவர் பெரும்புகழ் பெற்று விளங்கியிருத்தல் கூடும். ஆயினும் சுயவாராய்ச்சியால் உண்மையென்று விளங்காதனவும், கேவலம் அநுமானத்தால் தாம் ஊகிப்பனவும், பிரசுரித்தற்குரியன வல்லவென்று நினைத்துத் தம் உழைப்பினிற் சலியாது உழன்று வந்தார். தன்னைப்போன்று சாஸ்திரவாராய்ச்சி செய்யும் அறிஞர் துணை ந்யூட்டனுக்கிருக்குமாயின் அவர் கண்டறிய முடியாத இன்னும் பல உண்மைகள் அக்காலத்திலேயே அவருக்குப் புலனாயிருக்குமென்பதிற் சந்தேகமில்லை.

ந்யூட்டன், சூர்யனைச்சுற்றிப் பலகிரகங்களும் பூமியைச்சுற்றிச் சந்திரனும் சுழல்வதற்குக் காரணத்தைத் தமது யூகையால் கண்டறிந்து விட்டாரெனினும் தன் அநுமானம் உண்மையென்று கொள்வதற்குரிய அநுபவ ஞானம் பெறுமளவும் அவர் முயற்சி குன்றாதிருந்தார். சூர்யனிடத்தில் பொருந்தியிருக்கும் சக்தியே மற்றைக் கிரகங்களை அவற்றின் தூரத்திற்கேற்றபடி ஒரு குறித்த வளவிற் சூர்யனைச்சுற்றிச் சுழலும்படி செய்வதாகவும், அவ்வகையான சக்தி ஜூபிடர் கிரகத்திற்கும் பூமிக்கும்

உண்டென்றும், அதனால்தான் அவற்றைச் சுற்றிச்செல்லும் உபகிரகங்களும் சந்திரனும் சுழல்வதாகவும் ந்யூட்டன் ஊகித்து முடிவுகட்டினார். ஆயினும், அவ்வகையான சக்தியொன்று உண்டென்று நிச்சயமாய் அறியுமுன் தம் அநுமானத்தை உண்மையென்று நம்புவதற்கு அவர் மனம் இடங்கொடுக்கவில்லை. அப்படிச்சக்தி யொன்றுண்டெனக்கொண்டாலும் கிரகங்களின் தூரத்திற்கேற்ப அத்தனைமடங்கு மாறுபட்டு அச்சக்தி அவற்றை இழுப்பதை அறிவது எப்படி? இவ்வகையான கேள்விகளுக்குத் தக்கவிடை இன்னதென்று ஆராய்வதிலேயே ந்யூட்டன் இராப்பகல் ஓயாமல் உழைத்து வந்தார்.

சந்திரனுக்கும் பூமிக்குமிடையேயுள்ள தூரத்தைக் கணக்கிடுவதில் நேர்ந்தபிழையினால் ந்யூட்டன் தான் ஊகித்த முடிபுகளை சாஸ்திர வாராய்ச்சியால் நிரூபிக்க முடியாமல் தவறினார். தான் பிசகினது எதில் என்று அவர் நிர்ணயிக்க முடியவில்லை. சொற்ப வித்தியாசத்தால் தன் முயற்சி யாவும் அவலமானதற்கு அவர் வருந்தி, அம் முயற்சியை அவ்வளவிலேயே நிறுத்தி, வேறு விஷயங்களில் தம் கவனத்தைச் செலுத்துவாராயினர். கேம்ப்ரிட்ஜ் நகரில் இருந்திருந்தால் தம்மைப்போன்ற அறிஞருடன் கலந்து உண்மை ஆராய்ந்து தாமெண்ணியதைச் சாதித்திருப்பார். லிங்கன்ஷைரில் அவருக்கு அத்தகைய சௌகர்யங்கள் கிடைக்காமையின், காலம் வருமளவும் பொறுமையுடன் காத்திருக்கத் தீர்மானித்தார். மேலும், அவர் சங்கோச சுபாவம் வாய்ந்தவர். இக்காலத்தவரைப் போன்றிருப்பின் தாம் கண்டறிந்த விஷயங்கள் பிசகாயினு முண்மையாயினுஞ் சிறிதுங் கவனியாமலே அவற்றை வெளியிட்டுப் புத்தகங்கள் எழுதியிருப்பார். ந்யூட்டனுக்குத் தான் அறிந்தவற்றைப் பகிரங்கப்படுத்த

வேண்டுமென்னு மெண்ணம் ஒருகாலும் உதித்ததில்லை. சதா ஆராய்ச்சி செய்வதிலும், சிந்தனையில் ஆழ்ந்திருப்பதிலுமே அவருடைய மனம் பதிந்து கிடக்கும். பிறர் வலிந்து நெருங்கி நிர்ப்பந்தித்துக் கேட்டறிந்தாலன்றி ந்யூட்டன் தான் முடிவுக்கு வந்த விஷயங்களை ஒருவர்க்கும் அறிவிப்பதில்லை. விஷயங்களின் அருமையை உணர்ந்து அவற்றை நூலாகப் பிரசுரஞ் செய்ய முற்பட்டவர்கள் அவருடைய அந்தரங்க நண்பர்களேயன்றி அவரல்லர்.

ந்யூட்டன்தான் முதல் முதல் ஆகர்ஷண சக்தியைக் கண்டவர் என்று பலர் அபிப்பிராயப் படுகின்றனர், ஆயினும், அவருக்கு முன்னரே யாவரும், பூமி தம்மை இழுப்பதினாலேயே பொருள்கள் தரையில் விழுகின்றன வென்று அறிந்திருந்தனர். ஆயினும், கிரகங்களின் சலனத்திற்குக் காரணம் அவ்வகைச் சக்தியே யென்றும், கிரகங்கள் சூர்யனிடமிருந்து எவ்வளவு தூரமுள்ளனவோ அவ்வளவுக்கு மாறாகவே தம்சலனகதியிலும் வித்தியாசப் படுகின்றனவென்றும் ந்யூட்டன் தான் முதலிற் கண்டறிந்தார். கெப்ளர் செய்த ஆராய்ச்சியைப் பின்பற்றியே ந்யூட்டனும் ஆராய்ந்தார்; எனினும் அக்காலத்தில் மானிகள் எண்ணியிருந்தபடியே அறுபது மைல்களுக்கு ஒரு டிக்ரியென்று கணக்கிடவே ந்யூட்டன் நிமிஷம்ஒன்றுக்குப் பூமிகதி 13.9 அடியென்று தீர்மானிக்க வேண்டியதாயிற்று; உண்மையில் ஆகர்ஷண சக்தி விதிப்படி நிமிஷம் ஒன்றுக்கு 16 அடி செல்ல வேண்டுவதே முறை. அதனால்தான் ந்யூட்டன் அச்சமயத்தில் தமது முயற்சியில் தவறினார். அவர் பதினாறு வருஷங்கள் கழிந்தபின்னரே இவ்வருமுயற்சியை மீண்டும் துவக்கினார்.

ந்யூட்டனுடன் நெருங்கித் தோழமை பூண்டிருந்த வால்டேர் எழுதிவைத்துள்ள ஒரு சிறு சம்பவமொன்று

அவர் ஆகர்ஷண சக்தியைக் கண்டறிந்த விதமெப்படி யென்று விளக்குவதாம். சாதாரணமாய்ப் பெரியோரின் சரித்திரத்தினிடையிடையே புகுக்கப்படும் புனைவுரைபோலன்றி அச்சம்பவம் உண்மையில் நடந்ததென்பதற்கு வேறுபல ஆதாரங்கள் உள்ளன. ஒருநாள் ந்யூட்டன் தம்தோட்டத்திலிருந்தபோது அங்கிருந்த ஆப்பில் மரத்திலிருந்து பழமொன்று கீழே விழுந்தது. அதைக்கண்ட ந்யூட்டன் பின்வருமாறு ஆலோசனை செய்வாராயினர்:— 'மரத்தினின்றும் விடப்பட்ட இப்பழம் நேரே. பூமியின் மேல் வந்து விழுவதற்குக்காரணமென்ன? அக்கனியைத் தன்னிடம் இழுத்துக்கொள்ளக்கூடிய சக்தி பூமிக்கிருந்தாலன்றி அது கீழே விழுந்திராதன்றோ? பூமி சாதாரண வஸ்துக்களைத் தன்னிடம் இழுத்துக்கொள்வதுபோல் மற்றைக்கிரகங்களையும் தன்பக்கமாக இழுக்கவேண்டும்.'

இச்சிறு சம்பவமே அவருடைய ஆராய்ச்சிக்கு ஊன்றுகோல்போல் ஆகிப் பின்னால் அவர்கண்டு பிடித்த சலன விதிகட்கும் ஆகர்ஷண சக்திக்குக் கட்டுப்பட்ட கிரக சுழற்சி நியதிக்கும் காரணமாயிற்று.

பூமிக்கும் சந்திரனுக்குமுள்ள சலன சம்பந்தத்தை அறிதற்குச் சாத்தியமாகாததை யுணர்ந்த ந்யூட்டன் தம் மனத்தை ஆப்டிக்ஸ் என்னும் கண்ணூலிற்செலுத்துவாராயினர். அவர் கண்ணாடி வில்லைகளும், மாசகற்றுந் தூளும், ஒளிப்பரீக்ஷைக்குச் சாதனமாயுள்ள கருவிகளும் வாங்குவதில் தம் பணத்தைச் செலவிட்டார். முன் உபயோகப்பட்டுவந்த வில்லைகளினும் சிறந்தவற்றை உபயோகித்துத் தூரதிருஷ்டி கண்ணாடிகள் (Telescopes) செய்ய முயற்சித்து, அவ்வில்லைகளின் வளைவுகளை கணக்கிட்டறிந்து, அதற்குத்தக அவற்றை நெருங்கவைத்துப் பார்க்கையில் உருவங்கள் மங்கியும் சிதறியும் தோற்றினமையின் அதிருப்தியுற்றார்.

முடிவில் உருவம் நன்கு தெளிவாய் விளங்குவதற்கு ஒளியே யன்றி வில்லைகள் காரணமல்லவென்று உணர்ந்தார். ஒளியைச் சிதற வொட்டாது ஒருவழிப்படுத்தி, யோர் நுண்ணிய குறியிற் செலுத்தி, ஒளிசெல்லும் நியதியை அறிவதற்காக ந்யூட்டன் புதிய (Prism) கருவியொன்றை வாங்கினார், அவர் தம் வீட்டுப் பலகணியில் சிறுதுவாரமொன்று வட்டமாகச்செய்து அதன்வழியாக பிரவேசித்த சூர்யவெளிச்சம் அக்கருவியின் மீது விழும்படி செய்தார். வளைவாக விழுந்த அவ்வொளிக்கிற்று ஒரு வெள்ளைத்திரையின் மீது விழும்படி அக்கருவியை அசையாமல் திருப்பினார். வெள்ளைத்திரையின் மீது விழுந்த ஒளிக்கற்றை வட்டமாயிராமல் முட்டைவடிவமாய் அமைந்திருந்ததோடு ஓரங்களில் பல நிறங்களோடுங் கூடியிருந்தது. ஒளிக்கற்றை ஓரிடத்தில் வட்டமாய்ப் படியாது பரந்திருந்தமைக்குக் காரணமின்னதென்று ஆராயத்தொடங்கி ந்யூட்டன் திரையை வேறுவேறு இடங்களில் வைத்துப் பரீக்ஷை செய்து பார்த்ததில் திரையின் தூரத்திற்கேற்ப ஒளிக்கற்றையின் நீளமும் அதிகப்படுவதை உணர்ந்து கிரணங்கள் அக்கருவி (Prism) யிலிருந்து நேர்க்கோட்டிற் செல்வதையறிந்தார். ஒளிபரந்து விளங்குவதற்குக் காரணத்தை அறியவிரும்பி அவ்வெள்ளொளி வேறு ஒளிகளின் சேர்க்கையாயிருக்கு மென்றும், ந்யூட்டன் அநுமானித்துச் சோதனைசெய்யத் தொடங்கினார். நிறங்காட்டும் பொருள்களிற்காணும் வர்ணம் அப்பொருட்குரியதாய் அதனிடமுள்ள தன்றென்றும், அப்பொருளை விளக்கிக் காட்டும் ஒளிக்கேயுரியதாய் அதனிடமேயுள்ள தென்றும் ந்யூட்டன் அறிந்து கொண்டார். ஒரு சிவப்புக் கண்ணாடியிற் காணப்படுவது சூர்ய வெளிச்சமேயன்றி வேறன்று. ஒளி அக்கண்ணாடியிற் செல்வதால் சிவப்பாகிற தென்று நினைத்தல் தவறாகும். அச்சிவப்புக் கண்ணாடி

சூர்ய வொளியில் ஒரு பகுதியை நிறுத்தித் தன்னுள் இழுத்துக் கொள்கிறதெனினும் ஒளியிற் பெரும் பகுதி அதனுள் நுழைவதில்லை. சிவப்பென்னும் உணர்ச்சிபட நமது கண்களைப் பறிக்கும் பகுதியே அக்கண்ணாடியிற் செல்லுகின்றது. கருவி ஒளியின் வகைகளைப் பிரித்தற்கு உபயோகமாகிறது.

இங்ஙனம் ஆராய்ச்சி செய்து ஒளியின இயல்பையும் சேர்க்கையையும் அறிந்தபின் 6 இன்ச் நீளமும் 1 இன்ச் சுற்றளவுமுள்ள தூரதிருஷ்டிக் கண்ணாடியொன்று செய்யத்தொடங்கி அதைக்கொண்டு ஜூபிடர் கிரகத்திலுள்ள சந்திரர்களைக் கண்டார். பின்னால் அவர் அதனினும் மிகப் பெரிய பிரதிபிம்பிக்கும் தூரதிருஷ்டிக் கண்ணாடியொன்றைச் செய்துமுடித்தார்; 'சர் ஐஸாக் ந்யூட்டனால் அவரது கைகளாலேயே செய்யப்பட்ட நூதனமான பிரதிபிம்பிக்கும் தூரதிருஷ்டிக்கண்ணாடி' என்று அடியிற் குறிக்கப்பட்ட பெரிய கருவி இன்றும் லண்டன்மா நகரில் ராயல் ஸொஸைட்டி புஸ்தகசாலையில் இருப்பதைக் காணலாம். இப்போது சிறந்து விளங்கும் தூரதிருஷ்டிக் கருவிகள்யாவும் ந்யூட்டன் நிருமித்த கண்ணாடியின் சாயை யிலேயே செய்யப்பட்டவை யென்பதற்கையமில்லை.

கொள்ளைநோய் அடங்கினபின் 1667-ம் ஆண்டினில் ந்யூட்டன் கேம்ப்ரிட்ஜ் நகரடைந்து ட்ரினிடி கல்லூரியிற் சேர்ந்து தம் ஆராய்ச்சியை நடத்தத் தொடக்கினர். தமது ஆராய்ச்சி வன்மையைப் பிறர் அறிந்து, தம்மைக் கௌரவித்துக் கொண்டாடவேண்டு மென்னும் வீண் பெருமை ந்யூட்டனுக்குச் சிறிதுமில்லாதிருந்தது. அவர் வீண் ஆடம்பரங்களின்றிப் பொறுமையாய் உழைத்துவந்தாரெனினும் அவருடைய சலிப்பில்லாத உழைப்பையும்

மதி நுட்பத்தையும் ஆராய்ச்சித் திறமையையும் அவரது செயல்களாலறிந்த கல்விமான்கள் அவரைக் கணிதநூல் வல்ல அறிஞரெனப்பெரிதும் மதித்து அவரை அக்கல் லூரியில் ஒரங்கத்தினராகவும் தேர்ந்தெடுத்தனர். 1669ᵐ ஆண்டினில கணிதநூல்வல்ல போதகாசிரியராய்ப் புகழ் பெற்ற ந்யூட்டனின் நண்பரான டாக்டர் பாரோ வென்பவர் தமது காலத்தை மதவிஷயங்களில் கழிக்கத் தீர்மானித்துத் தமது பதவியை ந்யூட்டனுக்களித்து அவரது பெருமையை அங்கீகரித்தார். அப்போது கணித சம்பந்தமான ஒரரியவிஷயத்தைப்பற்றிப் பல கல்விமான்களுக்குள் பெருந்தர்க்க மொன்றெழ டாக்டர் பாரோ அதன் காரண த்தை ந்யூட்டனுக்கு அறிவித்தார். வாதிக்கப்பட்ட அவ் விஷயத்தைப்பற்றித் தாம் பல வருஷங்களுக்குமுன் ஆரா ய்ந்து முடிவு செய்திருந்த தம் அபிப்பிராயங்களடங்கிய பழங்காகிதங்களை ந்யூட்டன் தமது நண்பர் பாரோவுக்குக் காட்ட, பாரோ அவற்றில் தாம் அறியவேண்டியிருந்த விஷயமேயன்றி மற்றும் பல அரும்பெரும் விஷயங்களி ருந்ததைக்கண்டு அவை உலோகோபகாரமான முயற்சி யென்று மகிழ்ந்து ந்யூட்டனை வியந்து அவருடைய மதிநல த்தைக் கொண்டாடினர். ந்யூட்டன் வகித்துவந்த பதவியே இக்காலத்தில் கேம்பரிட்ஜ்கல்லூரியிற் கிடைத்தற்கரிய பெரும்பேறாகும்: அதனை இன்னும் ந்யூட்டன் பேரிட்டே வழங்கிவருவதுடன் அப்பதவியை வகிக்கப் போட்டி போடும் புலவர்க்குக் கணக்கில்லையென்னலாம்.

அதன் பின்பு ந்யூட்டன் தமது புதிய பதவியை வகித்து முதலில் கண்ணூற்சம்பந்தமாக அநேக உபன்யா சங்கள் செய்தார். அவற்றை லத்தீனிலும், ஆங்கிலத் திலும் எழுதி வெளியிட்டனர். அவற்றின் அருமையை இன்றும் கல்விமான்கள் மிகவும் பாராட்டிவருகின்றனர்.

நாளடைவில் ந்யூட்டனின் புகழ் ராயல் சொசைட்டியாராலும் அங்கீகரிக்கப்பட்டது. அச்சங்கம் 1662-ம் வருஷத்தில் ஆங்கிலமகிபர் இரண்டாவது சார்ல்ஸ் என்பவரது ஆதரவின் கீழ்ப் பிரபலமடைந்திருந்தது. பாய்ல், ஹூக், க்ரிஸ்டபர் ரேன் முதலிய பல அறிவாளர் அச்சபையை அலங்கரித்து வந்தனர். டாக்டர் ஜில்பொர்ட் என்பவரைப் பின்பற்றித் தமது ஆராய்ச்சியை நடத்திப் புகழ் பெற்ற பாய்ல் என்பவருக்கு ஹூக் துணையாயிருந்து விரைவில் அவரை விஞ்சிவிட்டார். ந்யூட்டனுக்குமுன் ஹூக்கின் பெருமை சோபிக்கவில்லையெனினும் அவர் சிறந்த புத்திமான்; ஆராய்ச்சித்திறம் வாய்ந்தவர்; சலியாத முயற்சியும் கைத்தேர்ச்சியும் வாய்ந்தவர். கலிலியோவுக்குச் சமமான பெருமையினையுடையவர். செங்கதிர் பரப்பிச் சகமெங்கும் ஒளிகொடுத்து விளங்கும் ந்யூட்டன் என்னும் சூர்யனின்முன் ஏனையசாஸ்திர வறிஞர் வான்மீன்களெனத் தோன்றினரெனினும் அக்காலத்தில் ராயல் சொஸைட்டியில் சிறந்த அறிஞர் விளங்கிவந்தனரென்று சொல்லத் தடையில்லை. ரேன் என்பவர் சில்பநூல் அறிவு நிறைந்தவர்: எனினும் அவருக்கு மற்றெல்லாச் சாஸ்திரங்களிலும் பழக்கமும் ருசியும் உண்டு.

ந்யூட்டன் தான் எழுதியதை முதன்முதல் ராயல் சொஸைடியாரது பார்வைக்கு அனுப்பினர். தாம் கண்டுபிடித்த தூரதிருஷ்டிக்கருவியையும் அதைப்பற்றிய குறிப்புகளையும் கண்டு அக்கல்விமான்கள் வியப்புற்றுத் தமது அபிப்பிராயத்தையும் வந்தனத்தையும் எழுத்துமூலமாக அறிவித்து அவருடைய மேதையைப் புகழ்ந்து கொண்டாடினர்கள். சாலிஸ்பரியின் பிஷப்பாகிய பர்னெட் என்பவர் ந்யூட்டனைப் பெருமைப்படுத்தினர். அவரது உத்தேசப்படி ந்யூட்டன் ஒரு பெரும்பதவியையும் பெற்றனர். (இன்னும் வரும்)

விட்டு விரைந்து போகின்றீரோ' என்று சொன்னான். 'பிடியோடு சேர்ந்த களிறுகளைத் தூங்கு நடைக்கன்று களோடு கைக்கொண்மின்' என்று கூறி, எங்கட்கு அளித்தான். தான் விரும்பிவைத்திருந்த ஊர்திகள், ஆடைகள், அணிகலங்கள் முதலியவற்றை மேன்மேலும் எங்களுக்குத் தந்தான்- வீடு பேறுகுறியாது செல்வத் தைக் குறித்து மிக்க தவத்தைச் செய்கின்ற மாக்கள் தம் முடைய தவஞ்செய்த உடம்பைப்போக்காமல், அத்தவத் தாற் பெறும் பயனைப்பெற்ற தன்மையை யொப்ப யாங்க ளும் வேண்டுவனவற்றை வாரிக்கொண்டோம். பெருமை பொருந்தின செல்வத்தையும், பெரிய பெயர்களையும், வலி யமுயற்சியையும், வெற்றி முரசுமுழங்கும் படையினையு முடைய சேரசோழபாண்டியர் தம்மிற் பகைமை நீங் கிச் சேர்ந்து, செல்வக்குறைபாடின்றி, அரசவையிருந்த தோற்றம் போல, மிடி எக்காலமும் இல்லையாம்படி யா னும் திரும்பி வந்தேன். நீயும் அவன் பாற் செல்க!

இக் கரிகால் வளவன் இளஞ்சேட்சென்னியின் புதல் வன்; அழகிய பல தேரினை யுடையவன்; வெல்லும் வேலைத் தரித்தவன்; முருகனது சீற்றத்தைக் கொண்ட வன்; யாவரும் நடுங்கும் தலைமையினை யுடையவன்; தாய் வயிற்றிலிருந்து நல்ல முகூர்த்தத்தில் பிறந்து, அரசவுரி மையைப் பெற்றவன். யாவரும் விரும்பும் வெப்பத்தைத் தரும் இளஞாயிறு கடன் மீது பகற் பொழுதைச் செய் யுங் கிரணங்களைப் பரப்பிப், பின்னர் விசும்பிலே மெத் தெனச் சென்றாற் போல, இவனும் தவழ்தலைக் கற்ற நாள் தொடங்கி, கூற்றுவனது வலியைக் காட்டிலும் தன்னிடம் மிகுகின்ற வலியாலே செருக்குக்கொண்டனன். முன்பு இவனது வலியறியாத பகைவரெல்லாரும் பின்பு இவனது வலியை யறிந்து, அவனது ஏவல் கேட்டு நடந்தனர். இவனது ஏவல் கேட்காத பகைவர் தேசத்தைத்தன் தோள்

வலியாலே வென்று பாழ்படுத்தவும், அவர்களது நாட்டிற் சிறந்த நன்னாட்டைத் தன்னாட்டுடன் சேர்த்துக்கொண்டு, நாடோறும் செழித்தோங்குமாறு அதைக் காக்கவும் எண்ணினான். உடனே யாளியின் குருளை, பால் குடிக்கும் இளம் பருவத்தே, இரைக்காக வேட்டையாடிக், களிற்றைக்கடுகக் கொன்றாற் போல, இவனும் கட்கினிய ஆத்தி மாலையைத் தரித்துக்கொண்டு, போரை வேட்டு எழுந்து, கரியபனையின் குருத்தில், அலர்ந்த வலப்பக்கத்து ஓலையையும், கருஞ்சினைவேம்பின் வாளரத்தின் வாய் போலும் விளிம்பினையுடைய அழகிய தளிராற் செய்த மாலையையும் முறையே அடையாளமாலையாகத் தரித்த சேர பாண்டியராகிய இருபெருவேந்தரும் ஒரு களத்தவிய வெண்ணி யென்னும் ஊரிடத்தே அவர்களைப் பொருதான். இவ்வாறு பகையரசர் நடுங்கும்படி, அச்சந் தோன்றும் வலிய முயற்சியைக் கைக் கொண்டு அவன் விளங்குகின்றான்.

அவனது நாட்டைக் காவிரி பாது காத்து வருகின்றது. பல்லுயிரும் மாட்சிமைப் படுதற்குக்காரணமாகிய பகலவன் தன்னிலை திரிந்து, பல் கதிர்பரப்பிக், கஞ்சங்குல்லை தீயவும், மரங்களின் கொம்புகளை நெருப்புத் தின்னவும், மலையருவிகள் வற்றிப் போகவும், வான மழை பெய்யாதொழியவும் இவ்விதமாக நற்குணமற்ற பெரிய வற்கட காலத்தைவிளைத்தபோதும், இக்காவிரியாறு தன் வளங்குன்றுவதில்லை. வற்கட காலத்திலும் நுரையைத் தலையிலேந்தி, ஆரவாரத்துடன் அதில் நீர் பெருகிவரும். அப்போது நரந்தம் புல்லும், அகிலும், சந்தனமுமாகிய சுமையைத் தாங்கிக்கொண்டு, துறை தோறும் துறை தோறும் அவற்றைத்தள்ளிக்கொண்டு நீர் போகும். இப்புது நீர்ப்பெருக்கு குளத்திலும், வயலிலும் புகுந்து நிறையும் போது, அவற்றில் நீராடு மகளிர் கடுகக் குடைந்து விளையாடுவர்.

அவ்வள நாட்டின் கண்ணுள்ள வரம்பினையுடைய ஒரு வேலி நிலம் ஆயிரக்கலச் செந்நெல் விளைவைக் கொடுக்கும். இந்நிலங்களில் வளரும் நெற்கதிர்களைக் களமர் வளைந்துநின்று, அரிவாளின் வாயாலே யறுப்பர்; நெற் சூட்டை மலையாக அடுக்குவர்; நாடோறும் அதைக் கடா விட்டுத் திரிப்பர்; அதினின்றும் திரட்டிய தொலையாத நெற்பொலியை மேருவென்னும்படி குவிப்பர்; பின்னர் நெருங்க வைத்துள்ள அவரது குதிரின் கண் வெற்றிட மில்லையாம்படி நெல்லைச் சேமித்துவைப்பர்.

ஒரு மாநிலத்தில் ஒரு மாநிலத்தில் திடர் தோறும் திடர் தோறும் நெற் கூடுகள் பொருந்தின அச்சோழ நாட்டில் தாழ்தெங்கின் தண்ணிய சோலைகளிருக்கும். குடிமக்களிட்ட குருதிச் சோறாகிய பலியை விழுங்கின மருத நிலக் கரும் காக்கை நெய்தனிலத்து மனைகளைச் சூழ்ந்துள்ள நொச்சியின் நிழலிடத்தே கிடக்கும். ஈற்று யாமை, தன் பார்ப்பைத் தான் தின்றதை வெறுத்ததாயின், அதனைப் பின்பு பசித்த காலத்துத் தின்பதற்குப் பாது காத்துவைக்கும். மருத நிலத்து உழவர்மகளிர் நெய்தல் நிலத்தின் மணற்குன்றிலே வண்டலிழைத்து விளையாடுவர். பசிய பாகற் பழத்தையும், சிவந்த சுளையையுடை குலை கொண்ட பலாப் பழத்தையும் தின்று, வளைந்த காஞ்சிமரத்திலும், செவ்விய மருதிலுமிருக்கும் பெடை மயில்கள் ஆரவாரித் தழைக்கும்படி மடமஞ்ஞைகள் அங்கு நின்றும் போந்து, நெய்தலிலுள்ள நிலவு போலும் இடுமணலிலே, யாழோசை போல ஒலிக்கும் வண்டினது பாட்டைக் கேட்டு அதற்கேற்பத் தோகையை விரித்துப் பல பகுதிப்பட ஆடும். சுறுத்திரியும் கருங்கடலில் இறாலைத் தின்ற திரண்ட நாரைகள் பூக்களையுடைய புன்னையின் கொம்பிலே தங்குகையில், அதன் மேலே முறிகின்ற உயர்திரையின் ஆரவாரத்திற்கு வெருவி மருத நிலஞ்சென்று, அங்குள்ள இனிய பனையின் மடலிலே

தங்கும். களமர் திரண்டு, கரும்பையும் நெல்லையும் அறுக்கும் போது எழுப்பும் ஓசையின் மிகுதியைக்கண்டு, நாட்டில் வாழ்வோர் நீரற்ற விடத்திலெழுந்த அடும்பினையும், படர்கின்ற பகன்றினையும், தளிரையுடைய புன்கினையும், தாழ்ந்த சோலைகளையு முடையதாய், அரும்பின ஞாழலோடே ஏனை மரங்களும் திரண்ட அந்நாட்டை வெறுத்தாராயின், அவ்விடத்தை விட்டுப்போய், நீலநிற முல்லை படர்ந்த பல காட்டு நிலத்தே சென்று, அந்நிலத்தைக் கொண்டாடுவர். அவிழ்கின்ற தளவினையும், பரந்த தோன்றியினையும், அலர்கின்ற முல்லையினையும், பூ உகுகின்ற தேற்றாவினையும், பொன்போலும் பூவினையுடைய கொன்றையினையும், நீலமணிபோலும் பூவினையுடைய காயாவினையுங் கொண்ட நல்ல காட்டி லுறைகின்ற ஒழுக்கத்தைக் கானவர் வெறுக்கின், அவர்கள் மருத நிலத்தே சென்று, அவ்வொழுக்கத்தைப் புகழ்வர். குலைகொண்ட தெங்கினையும் வாழையினையும், கொழுவிய காந்தளினையும், மலர்ந்த சுரபுன்னையினையும், துடியோசைப் பேராந்தையினையு முடைய பாக்கத்துக் குடியிருப்பில் வாழும் பரதவர் அவ்விடத்தை வெறுப்பின், அவர்கள் குறிஞ்சி நிலத்தே சென்று, அவ்விடத்தைப் புகழுவர். தேனாகிய நெய்யும் கிழங்கும் விற்றவர்கள் மீனினது நெய்யும் நறவும் கொண்டு போவார்கள். இனிய கரும்பையும் அவலையும் கூறுபடுத்தி விற்றவர்கள் மானினது தசையையும் கள்ளையும் கொண்டு போவர். குறவர் தம் நிலத்துப் பூக்களை வெறுக்கின் நெய்தலின் நறும் பூவாற் செய்த கண்ணியைச் சூடுவர். கானக் கோழிகள் நெற்கதிரைத் தின்னும். மனைக் கோழிகள் தினையைத் தின்னும். மலையிடத்திற் கரிய மந்திகள் கழியிலே மூழ்கும். கழியில் திரியும் நாரைகள் மலையிலே கிடக்கும். குளிர்ந்த வைப்புக்களையுடைய இந்நான்கு கூறாகிய நாடுகளும் அச்சோழவள நாட்டில் திரண்டுள்ளன.

இந்த வள நாட்டைத் தனக்கே உரிமையாகப் பெற்ற வெல்வேல் குரிசிலாகிய கரிகால் வளவன் பெருநட்புடனே நெடுங்காலம் உலகை ஒரு குடைக் கீழாளுகின்றான். அவனது செங்கோலையும் தண்ணளியையும் உலகம் ஏத்திக் கூறுகின்றது. தருமத்தோடு கூடிய வழியை உலகோர் அவனது செங்கோலைப் பார்த்துத் திரிபற உணர்ந்து கொள்கின்றனர். அவனது ஆணையை உலகம் மீக்கூறுகின்றது. வழக்கு மாறுபட்டுத் தனது அரசவையிற் புகுந்தோர்க்கு அவன் அவ்வழக்கைத் தீர்த்து, அவரது மாறுபாட்டையும் போக்குகின்றான்.

இங்ஙனம், மேலான அரசியல் நடத்தும் திறமை வாய்ந்து, அருளைத் தன்னிடம் நிரம்பக்கொண்ட, இத் திருமாவளவனிடம் சென்று, அவனது திருவடிகளுக்கு அண்ணிதாக நின்று வாழ்கெனத் தொழுது வணங்கி, நும் மூடையவறுமை தோன்ற நீவிர் அவன் முன்னே நிற்பீராயின், கன்றையீன்ற பசு தன் கன்றுக்குப் பால் சுரந்து கொடுக்கவேண்டு மென்று விரும்புவதுபோல, அவனும் நமது மிடி இன்றாம்படி பேணிப்பார்ப்பான். நும்மிடத்துள்ள வித்தையை அவன் கேட்பதற்கு முன்னமே, கொட்டைப் பாசியின் வேர்போலே மாசொடு கூடிய தையலையுடைய உமது துணிகளை விரைவில் போக்கி, தூய பட்டாடைகளை அணியத்தருவான். நூலால் கட்டாத நுண்மையையும், பிணக்கத்தையுமுடைய பொன்னரி மாலையையும், வெள்ளிதாகிய ஒளியையுடைய முத்தமாலையையும் பாடினிக்குச் சூடக் கொடுப்பான். நெருப்புத் தழைத்தாலொத்த பொன் தாமரையைக் கடை குழன்ற அவளது கரிய மயிரிலே பொலிவுபெறச் சூட்டுவான். தன் கடுமையாற் சிறிதமையு மென்று கைகவித்தற்குக் காரணமான தீம்பூ நாறும் கட்டெளிவை மேன் மேலும் வார்த்துத் தரத்தர, நாடோறும் நாடோறும் நீவிர் அதைப் பருகுவீர்.

அவனிடத்தினின்றும் கடுக நீங்கிப்போக நீவிர் நினைப் பீராயின், அவன் அது பொறாமல் பலகாலும் வருத்தமுறு வான். யானைக்கொம்பாற் செய்த தாமரை முகையினை யுடைய நெடுந் தேரிலே சாதிலிங்க மூட்டின தலையாட்டம் பொங்கப், பிடரிமயிரசைய, பாலையொத்த நிறத்தினை யுடைய குதிரைகள் நான்கினைச் சேரப் பூட்டி, தான் காலா லே எழுடி பின்னே வந்து, குதிரைகளின் கடு விசைக்கு இவர் இருத்த லாற்றா ரென்று கருதி, செலுத்துதற் கினிய தாறுகோலைப் போக்கி, இங்ஙனம் ஏறென்று நும்மை ஏறவிட்டு, ஏனை யாழ்களின் வீறுபெற்ற யாழ்ப் பாணர்க் குக் கொடுக்கும் முறைமைகளை நினக்கும் தந்து, நும் மைக் கடுக விடுவானல்லன்; பின்னர் நின்னை நோக்கி, செல் வம் யாக்கை முதலியன நிலையாத இவ்வுலகத்தில் புக ழொன்றுமே நிலைபெறுவதைச் சீர்தூக்கிப்பார்த்து, பெற்ற பொருள்களைப் பிறர்க்குக் கொடுத்து, இங்ஙனம் செல்க வெனக் கூறி, அங்ஙனம் நீ போதற்கு நீர்வளம் மிகுந்த தண்ணிய மருதநிலஞ் சூழ்ந்த தளராத குடியிருப்பினையு டைய, பல நல்ல ஊர்களையுடைய நாடுகளையும் பல யானை களையும் தாழ்வில்லாது அவன் தர வல்லவன்.

3. சிறு பாணாற்றுப்படை.

முன்னுரை

பாணர் என்பார் பாடுபவர். இவர் இசைப்பாணர், யாழ்ப் பாணர், மண்டைப்பாணர் எனப் பலராவர். சிறுபாணரென்பார்

இங்கு கூறப்பட்டவருள் சிறிய இசைக்காரர். ஆதலின், சிறு பாணாற்றுப் படை யென்பது பரிசில் பெறக் கருதிய சிறு பாண னொருவனைப் பரிசில் பெற்றுனொருவன் வள்ளலாகிய ஒரு பிரபு விடம் போய்த் தான் பெற்றவாறு பெரும் பரிசில்களைப் பெற்று வரும்படி உய்ப்பித்தல் எனப் பொருள் படும். இப்பாட்டைப் பாடியவர் இடைக் கழி நாட்டு நல்லூர் நத்தத்தனர் என்ற புலவர்.

இப்பாட்டின் கருத்து.

ஏறுமா நாட்டு நல்லியக் கோடன் இடத்தே பரிசில் பெற்ற வொருவன் தான் திரும்பி வரும்போது எதிர்ப்பட்ட வொரு சிறு பாணனை நோக்கி, அந்நல்லியக் கோடன் பாற் சென்று, தான் பெற்றவாறு பெருஞ் செல்வங்களைப் பெற்று வரும்படி ஆற்றுப் படுத்துகின்றான். இப்பாட்டில் நல்லியக் கோடனது வள்ளன் மையும், அவனது நகரங்களாகிய எயிற் பட்டினம், வேலூர், ஆமூர் முதலியவற்றின் இயல்பும், அவ்வற்றி லுள்ளாரது நற்குண நற்செய்கைகளும், அவனது அரண்மனையின் சிறப்பும், பல திறத்தினரும் எத்தும்படி பல குண விசேஷத்தோடு அவன் வீற்றிருத்தலும், தமிழ் மூவேந்தரது தலை நகரங்களாகிய மதுரை, வஞ்சி, உறந்தை என்னும் மூன்று நகரங்களின் நிலைமையும், கடை யேழு வள்ளல்களாகிய பேகன், பாரி, காரி, ஆய், அதிகன் நள்ளி, ஓரி என்பார் இன்ன இன்ன கொடையால் பெயர் பெற்றார் களென்பதும் வெளியாகின்றன.

உரை நடை.

மூங்கில் போலுந் தோளினையுடைய மண்மகளின் மணிகள் தங்கும் மார்பிடத்தே கிடந்தசையும் முத்துவடம் போல அருவிகள் இரண்டு மலைகளினின்றும் வீழ்ந்து, கரையைக் குத்தித் கொண்டு, காட்டாறுகளாகத் திரண்டு ஓடின. அவற்றின் புனல் நறும்பொழிலிடத்தே பரந்து, மரங்களை அலைத்தது. அங்குப் படிந்த நுண்ணிய அறல்கள் குயில்கள் அலகாலுளர்ந்து உதிர்த்த புதிய பூக்களின் வாட லைச்சூடின இவ்வாறு அறல்பட்ட இடங்களெல்லாம், மயிரை விரித்தாலொத்த தன்மையவாக, இளவேனில் நிலை பெற்றது. இக்காலத்திற்குப் பின்னாளிலே, ஞாயிறு வெங்

கதிரைச் செலுத்துகையினாலே, காலையுமாலையும் நண்பக லன்ன கடுமை கூர்ந்து, சோலை தேம்பிக், கூவல் மாறி, நீரும் நிழலுமின்றி, நிலம் பயந்துறந்து, புள்ளும் மாவும் புலம் புற்று இன்ப மின்றித் துன்பம் பெறும் பாலைத் தன் மையும் நிலை பெற்றது.

போறிவு வாய்ந்த இரவல! வள்ளியோரின்மையின் பரிசிலர் செல்லாத இவ்வுலகத்தே பரிசில் தருவோரை விரும்பி, உன்னையே வெறுத்துக் கொள்ளும்படி வருத்தும் உனது வறுமை உன்னைத் தூண்ட, நீ விறலியருடன் இங் குப்போந்தனை. அவரது கூந்தல் உலகிற்கு அருள் புரிந்து மெல்லியதாய் வீழ்ந்து தாழ்கின்ற மழையினது அழகைத் தன்னிடத்தே கொண்டு, எண்ணெயிலே தோய்ந்து இருண் டுள்ளது. அவரது சாயல் மயில்கள் பலவுங் கூடி நீல மணிபோலும் கண்ணினையுடைய கலாபங்களை, மிகளிர் மயிரை விரித்தாற்போல, விரித்துப் பார்த்து, இவர்கள் சாயலுக்கு ஒவ்வே மென்று தம் பேட்டிற் குள்ளே சென்று மறைதற்குக் காரணமாகவுள்ளது. அவரது அடி கள் ஓடி யிளைத்து வருந்துகின்ற நாயினது நாக்கின் நல்ல அழகை மிஞ்சி, விளங்குஞ் சிலம்பு முதலியன இன்றி, வறுமையாலே பொலிவழிந்துள்ளன. அடிகளோடே தொடர்பு பட்ட அவரது துடைகள் கரிய பிடியினது நிலந் தோயும் தடக்கை போலப் பருத்து, மால்வரையில் ஒழுங்கு பட வளரும் வாழையெனத் திரண்டு, ஒன்றோடொன்று நெருங்கி யுள்ளன. அவரது பனிச்சை வாழைப் பூப் போன்று அழகு பெற்றுள்ளது. அவரது நோக்கம் மட மானின் நோக்கம் போலுள்ளது. அவரது நுதல் ஒளி வீசுகின்றது. அவரது எயிறுகள் பெருங் குலைகளையுடைய பனையினது நுங்கின் இனிய சோறு போன்றுள்ளன. பூணினை யணிந்த அவரது மார்பு புதிதாகப் பூத்த கோங் கினது முகையை இகழுகின்றது. இன்னும் இவர்கள் மெல்லிய இயல்பினையும், அழகிய கஞ்சங்குல்லைக் காட்

டகத்தே குவிந்து, எயிறென்னும்படி நெகிழ்ந்த முல்லை அரும்பைச் சூடுதற்கமைந்த கற்பினையும் உடையவர்..

வேனிலில் வெய்யிலால் வெம்மையுற்ற பருக்கைக் கற்கள் வேல் காய்ந் தன்ன தன்மையவாய், சத்துவம்பட ஆடும் உன் வாணுதல் மகளிரது சீறடியைக் கிழிக்கையினாலே, பாலையாகிய அருஞ் சுரத்து நின்ற செறியாத நிழலையுடைய கடம்பினது அடியிலே இளைப்பாறிப் பின்பு போக வேண்டுமென்று அவர்கள் மெத்தென நடந்து வந்தனர். அந்நடையாலிளைத்து ஒய்ந்த மெல்லிய அடியைத் தம் தொழிலை யன்றி வேறு கல்லாத இளையவர் மெத்தென்று வருடுகின்றனர். வாசித்தல் வல்ல பாண்மகன் நட்ட பாடை யென்னும் பண் முற்றுப் பெற்ற இனிமை தெரிகின்ற பாலை யாழை வாசிக்கு முறை யறிந்து வாசித்துப் பொற் கம்பியினை யொத்த முறுக்கடங்கின நரம்பினது இனிய ஓசையையுடைய சிறிய யாழை இடப் பக்கத்தே தழுவிக் கொண்டு, வழி வருத்தந்தீர இங்கே இளைப்பாறுகின்றனை. யாங்கள் கூறுவதைக் கேட்பாயாக!

சில நாளைக்கு முன்னே யாங்கள் பேரிசை நல்லியக் கோடனைக் காண்டற்கு விரும்பிச் சென்றோம். அவன் ஓவியர் குடியிற் பிறந்தவன்; குற்ற மின்றி விளங்கும் அறிவை யுடையவன்; வலிய முயுற்சியினைக் கொண்டவன்; பகைவர் முகத்திலும் மார்பிலும் வெட்டின வாய்த்த வாளையும், புலி யேறு போன்ற மிக்க வலி யினையு முடையவன்; பிறக்கிடாத அடியினையுடையவன். யானையைச் செலுத்துதலால் அவனது அடி தழும்பு கொண்டிருக்கும்; அதில் வீரக்கழல் கிடந்தசையும்; அவனது தடக்கை, பிடித்திரளைப் பலர்க்குக் கொடுக்கும் மாண்பினையுடையது; மழைபோன்ற வண்மையினையுடையது. இவன் பல வாச்சியங்களையுடைய கூத்தரைப் புரத்தல் வல்லவன்.

இவனது நகர் இராவணனது இராசதானியாகிய தொன்மாவிலங்கையின் பெயரைப் பெற்ற நன் மாவிலங்கை யாகும். இந்த இலங்கை நகரில் பல அரசர்கள் ஆண்டு வந்தனர். இந்நகரை அமைக்கத் தொடங்கிய நன் முகூர்த் தத்தின் விசேஷத்தால் இது ஒருவராலும் அழித்தற்கரிய முறைமையினைப் பெற்றுள்ளது. இதை அலைத்துச் செல்லும் ஆற்றிலே நறும்பூச் சுரபுன்னையும், அகிலும் சந்தனமும் மிதந்து கொண்டுவரும். குளிக்குந் துறை யிலே புனலாடும் மகளிர் அவற்றைத் தம் தோள்களுக்குத் தெப்பமாகக் கொள்வர்.

யாங்கள் அவனிடஞ் சென்று, பிறரால் பொறுத்தற் கரிய குடிப்பிறந்தோர்க் குரிய அவனது முறைமைகளை யும், அவன் தந்தையது வான் தீண்டும் நெடுவரை வளனை யும் பாடினோம். அந்நாளில் அறிவு முதலியன அழிதற்குக் காரணமான பசியின் மிகுதியால் யாங்கள் வருந்தினோம். எங்களது அட்டில் பொலிவழிந்து கிடக்கும். மேலே கட்டிய கழிகள் கயிறு முதலிய பிடிப்பற்று விழுந்துகொ ண்டிருக்கும். அதன் பழைய சுவரைக் கறையான் திரண் டெழுந்து தின்று கொண்டிருக்கும். அதன் கணுள்ள நனைந்த புழுதியில் உட் பொய்யாகிய காளான் பூத்திருக் கும். கண் திறவாத வளைந்த செவி யினையுடைய தன் குட்டி பசி மிகுதியால் பாலுண்ணுதலைப் பொறுத்த லாற்றாது, ஈன்றணிமையை யுடைய நாய் அதில் ஒருபுறம் குரைத்துக் கொண்டிருக்கும். நுடங்கும் நுண்ணிய இடை யினையும், வளையணிந்த கையினையுமுடைய கிணைப் பறை கொட்டுவோன் மனைவி ஒடுங்குதற்குக் காரணமான பசி யால் வருந்தி, குப்பையில் வளரும் வேளையைத் தன் பெரிய உகிரால் கிள்ளி, உப்பின்றி அதை வேகவைப் பாள். யாங்கள் வறுமை யுறுதலும் இயல் பென்று அறியாமல் புறங்கூறும் மட்வோர்க்கு நாணி, எமது தலை

வாசலை யடைத்து, மிடியால் வருந்தும் எமது கரிய பெரிய சுற்றத்துடனே கூட விருந்து, அவ் வெந்ததனைத் தின்போம். அத்தகைய பெரிய மிடி இன்றாகவும், எமது பசி வருத்தம் விட்டு நீங்கவும், எங்களுக்கு அப் பெருந்தகை மதம் பொழியும் கதுப்பினையும், கடுகக் கொல்லும் மேற் கோளினையும் மணி யசையும் பக்கத் தினையும், சிறிய கண்ணினையு முடைய பெரிய யானைகளையும், தேர்களையும் எங்களுக்குப் பரிசிலாகத் தந்தனன். அவற்றைப் பெற்று யாங்கள் அவ்விடத்து நின்றும் வாரா நின்றேம். இனி நீவிர் மூவேந்தர் பாற்பெறும் பரிசிலை விரும்பி அவ்வேந்தர் பாற் செல்லக் கருதினீராயின், யாம் கூறுகின்றவற்றைச் செவி சாய்த்துக் கேண்மின்!

சேரர் குடிப் பிறந்த குட்டுவன் குட புல நிலத்தைக் காக்கின்றான். வளம் பொருந்திய அவன தூர்களிலே பெருவாய் எருமைகள் கழனிகளில் கொழுமீன் துணி பட நடந்து, வள்ளிதழ்ச் செங்கழு நீர்ப் பூவைத் தின்று, பசிய மிளகு கொடி படர்ந்த பலாவின் நிழலிலே, மஞ்சளின் மெல்லிலை தம் மயிருடை முதுகைத் தடவ, முற்றாத இளைய தேன் நாறும்படி மென்று அசையிட்டுக், காட்டு மல்லிகை யாகிய பாயலிலே இன் துயில் கொள்ளும்.

இக் குட்டுவன் பகைவரது வட புலத்தின்கணுள்ள இமயத்திலே தன் வில்லைப் பொறித்தவன். கணயத்தை மாறுபடும் திண்ணிய தோளினையும், விரைந்த தேரினையு முடையவன். பெருகுகின்ற நீரலைக்கும் வஞ்சி யென்பது இவனது மூதூர். அவனைக் குறுகிப் பரிசில் பெற நீவிர் விரும்பினால், அவ்வஞ்சி தரும் பரிசில் வறிதாயிருக்கும்.

அங்குச் செல்லாது, நீவிர் தெற்கே செல்லக் கருதின், அங்கே தென் புலங்காக்கும் பாண்டியர் குடியிற் பிறந்த தத்து நீர் வரைப்பின் கொற்கைக் கோமா னுள்ளான்.

பகைவர் நிலத்தை வென்று கைக் கொண்ட செழியன் அவனே. அவன் முத்து மாலையையும், கொற்றக் குடையினையும், கட்கினிய கண்ணியினையும், கடிய தேரினையுமுடையவன். இவனது கொற்கையிலுள்ள உமணர்கள் மந்திகளைப் பிள்ளைகளைப் போல் வளர்ப்பார்கள். அம்மந்திகளின் மார்பு தேன் துளிக்கும் நுணாமரத்தினது சிறிய துண்டை உளியாற் கடைந்து, சாதிலிங்கந்தோய்த்தாற்போன்று சிவந்திருக்கும். கிடேச்சையாற் செய்த பூமாலையை அவற்றின் செவி யடியிலே நெற்றி மாலையாகக் கட்டி யிருப்பார். வலிய எருதுகளை யுடைய உமணரது சகட வொழுங்கோடே இம்மந்திகளும் கூடவரும். இவைகள் கிளிஞ்சிலின் வயிற்றிடத்தே மடமகளிர் எயிற்றை பொத்த முத்தை இட்டுப்பொதிந்து, உமட்டியரீன்ற கிளர் பூண் புதல்வரோடு கிலுகிலுப்பை ஆடும். இப்பாண்டியரது பேரூர் மதுரை. இது தமிழ் நிலைபெற்ற தெருவினையுடையது. நீவிர் அங்குச்சென்று பரிசில் பெறவேண்டின், அம்மதுரை தரும் பரிசிலும் வறிதாயிருக்கும். அங்குச் செல்லாது நீவிர் கிழக்கே செல்வீராகில், அங்கே குணபுலங் காக்கும் கோற்றவனுள்ளான். அவன் தூங்கெயிலெறிந்த தொடித் தோட் செம்பியன் மரபில் உதித்தவன். உலகறிந்த நல்லபுகழினையும், நல்ல தேரினையுமுடையவன். அவனது நாடு மருத நிலஞ்சூழ்ந்த அசையாத குடியிருப்பினையுடையது. அங்குள்ள பொய்கையின் அடைகரையிலே நெருங்கி வளரும் கடம்பினது மலர்கள் இந்திரகோபத்தை யொத்த தம் தாதையுதிர்த்தலின், தாது சேர்ந்த அதன் உண்ணுந்துறைகள் சித்திரத்தை யொத்திருக்கும். பொய்கைகளில் வளரும் தெய்வத்தாமரையின் பெரிய முக்கை நெகிழ்ந்து அழகிய முகம்போல மலரும். அங்கையைச்சாதிலிங்கந்தோய்த்தாலொத்த சிவந்த இதழ் சூழ்ந்த

செம்பொன்னாற் செய்தாலொத்த அப்பதும பீடத்திலே, தும்பி தன் இன்னுயிர்த்துணையைத் தழுவித் துயில் கொள்ளும். காலையில் துயிலெழுந்தவுடன் விருப்ப மருவின அத்தும்பி சீகாமரமென்னும் பண்ணைப் பாடிக்கொண்டு செல்லும். இந்த நாட்டுக்குத் தலைநகர் உறந்தை என்பது. கதவினையுடைய அதன் உயர்ந்த மதிலின் தலையிலே உருமேறு தன் கழுத்தைத் தினவால் தேய்த்துக்கொள்ளும். அது தன்னிடத்திருந்தோர் ஓடாமைக்குக் காரணமாகிய மேற்கோளினையு முடையது. இந்த உறந்தை நகர்க்குச் சென்று சோழனிடம் பரிசில் பெற நீவிர் விரும்புவீராயின், உறந்தை தரும் பரிசிலும் வறிதாகவிருக்கும்.

இனி, அம்மூவேந்தரிடஞ் செல்லாது, நீவிர் நல்லியக்கோடன்பாற் செல்ல விரும்பின், யாம் கூறுகின்றவற்றைக் கேண்மின்! அந்நாளில் வள்ளல்கள் எழுவர் ஈகையிற் சிறந்துவிளங்கினர். அவருள் பேகன் என்பான் பெரிய மலைநாட்டிற் குரியவன்; ஆவியர்குடியிற் பிறந்தவன். பெறுதற்கரிய வலிமை பொருந்திய வடிவினை யுடையவன்; மழை பருவம்பொய்யாமல் பெய்யும் மலைப்பக்கத்திலுள்ள காட்டகத்தே திரியும் மயில் கூவியதைக் கண்டு, குளிர்ந்து கூவிற்றென்று அருள் மிகுதியால் அதற்குப் போர்வை கொடுத்துப் புகழ்பெற்றவன். பாரி யென்னும் பெருவள்ளல் வெள்ளருவிகள் மிகுதியாகக் குதிக்கும் சாரலையுடைய பறம்பு என்னும் மலைக்கரசன்; சிறிய பூக்களையுடைய முல்லைக்கொடி தனது தேரினைத் தடுக்க, அது வேண்டிற்றாகக் கருதி, அதற்குத் தன் பெருந்தேரை நல்கிப் புகழ்பெற்றவன். காரி என்னும் வள்ளல் தன்னிடம் கொற்றவை தங்கப்பெற்றவன்; அதற் கறிகுறியாக அச்சந் தங்கும் நெடிய வேலினையும், உழலுந் தொடியணிந்த தடக்கையினையு முடையவன். ஏனையோர் கேட்டு

வியக்கும்படி இரவலர்க்கு ஒலிக்கும் மணியினையும், வெள்ளிய தலையாட்டத்தினையுமுடைய குதிரையையும், நாட்டையும், அருள்மொழியையும் கொடுத்துப்புகழ் கொண்டவன். ஆய் என்னும் வள்ளல் சந்தனம் பூசிப் புலர்ந்த திண்ணிய தோளில் வில்லை ஏந்தியவன்; தனக்கு நாகம் ஈன்று கொடுத்த ஒளிதிகழும் நீலநிற வுடையினை ஆலின்கீழ் அமருஞ் செல்வர்க்கு நெஞ்சு பொருந்திக் கொடுத்து, நீள்புகழ் படைத்தவன். அதிகனென்னும் வள்ளல் ஒளிதங்கும்நெடு வேலினையும், கடல்போன்ற தானையினையு முடையவன்; மால்வரையின் கமழ்பூஞ் சாரலில் அழகு பெற்றுவளர்ந்த கருநெல்லியின் தீங்கனியைத் தான் நுகர்ந்து உடம்பு பெறுதே ஒளவைக் கீந்து, அரும் புகழ் பெற்றவன். நள்ளி என்னும் வள்ளல் துளிமழை பருவம் பொய்யாது பெய்யும் காற்றுத் துஞ்சும் நெடிய சிகரங்களையுடைய செறிந்த மலைநாட்டுக்குரியவன். பகைப் புலத்தை வென்று பெருமைபெற்ற தடக்கையினையுடையவன். தனமனத்து நிகழ்கின்றனவற்றை மறையாது கூறுபவன்; நட்புச்செய்தோர் மனம் மகிழும்படி அவர்கள் இல்லறம் நடத்துதற்கு வேண்டும் பொருள்களை நாடோறும் கொடுத்துத் தன் புகழினை நாட்டியவன். ஓரி என்னும் வள்ளல் செறிந்த கொம்புகளிடத்தே நறிய பூக்கள் நெருங்கிய சுரபுன்னையையும், குறுமலைகளையுமுடைய நன்னடுகளைக் கூத்தர்க் கீந்த கொற்றவன்; காரி என்னும் குதிரையையுடைய காரி என்பாரோடு பொருதவன்; ஓரியென்னும் குதிரையையுடையவன்.

இவ்வாறு மேலே சொல்லப்பட்ட எழுவரும் அக்காலத்து மேற்கொண்ட கொடையாகிய செவ்விய பாரத்தை நல்லியக்கோடன் தான் ஒருவனுகப் பொறுத்து வருகின்றான். இவனது கீர்த்தி விரிகடல்வேலி உலகெலாம்

சென்று விளங்குகின்றது. இவன் குறிஞ்சி நிலத்துக் காரசன். இவனது மலையில் மயில்கள் தம் கலாபத்தை மஞ்சிடையிலே பரப்பி ஆடுந்தோற்றம், மெல்லிய தோளிணையும், துகில் சூழ்ந்த அரையிணையும், அசைபு்மியல் பிணையுமுடைய மகளிர் அகிற்புகையை ஊட்டுவதற்குத் தம் மெல்லிய கூந்தலை அழகுபெற விரித்தது போன்றிருக்கும். அவனது நெடிய மலைகளில் மூங்கில்கள் அசைந்துகொண்டிருக்கும். அவற்றின் சிகரங்கள் ஏறுதற்கரிய உயர்வினையுடையனவாயினும், இடியேறுகள் வீழ்ந்து இடித்துத் தாம் ஏறுதற்கு வழிபண்ணியுள்ளன. இக்குறிஞ்சிக் கோமான் கொய்தளிர் மாலையிணையும், புகழ் நிலைத்த பண்பிணையுமுடையவன். அவனிடம் பரிசில் விரும்பி நீர் செல்லின், வழியிற் பெறுமவற்றை யாம் கூறக்கேண்மின்! முன்னர் அவனது எயிற்பட்டினஞ் செல்மின். அது பாடல் சான்ற நெய்தனிலத்து நெடிய வழியுள்ளது; நீலமணி போலும் கழிசூழ்ந்த ஊர்களையுடையது; பனிநீர்க்குளங்கள் பலவுடையது. கடல் பரந்து எற்றிப் பொருதலைச்செய்யும் அதன் அலைநீர்க்கரையில் வெண்மணலிடத்து நிற்கும் தாழைகள் அன்னம்போலப் பூக்கும்; இளவேனில்தொடங்கும் நாளிலே செருந்தி கண்டோர் பொன்னென மருளும்படி மலரும். கழிமுள்ளி ஒளியையுடைய நீலமணி போல விரியும்; நெடுங்கால் புன்னை நித்திலம் போல அரும்பும். அப்பட்டினத்தை நீவிர் அடைந்தால், கொத்தாகப் பூக்கும் தோட்டங்களையுடைய கிடங்கில்கோமானைப் பாடுங்கள். அவன் அரும்பு நெகிழ்ந்த மாலையிணைத்தரிக்கும் அழகன். உமது பாட்டையும், தாளவறுதியையுடைய குழலோசையின் தாளத்திற்கொப்ப ஆடும் நும்மகளிரது கூத்தையும் மெச்சி, அவன் மகிழ்வான். ஓங்குநிலை ஒட்டகம் துயில் கிடந்தன்ன வீங்கு திரை கொணர்ந்த மணநாறும் அகில் விறகாலே கரும்புகைச் செந்தீயை எரித்து, பெருந்

தோளினையும், மதி விரும்பும் மறுவற்ற திருமுகத்தினையும், கூரிய வேல்போலும் பார்வையினையுமுடைய நுமது மகளிர் அரித்த களிப்பு மிகும் பழைய கள் தெளிவையும், உலர்ந்த குழல் மீன் சூட்டையும் பரதவர் கொண்டு வந்துதர, நீவிர் அவற்றை மனைதொறும் மனைதொறும் பெறுவீர். அதன் பின்னர் முருகன் கையிலுள்ள வலிய வேலின் நுதிபோல, கேணியில் பூத்த வெற்றி வேலாலே பெயர் பெற்ற வேலூரைச் சேர்மின். இவ்வூர் கணவன் கூறிய சொற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ் செய்து தலைவி ஆற்றியிருக்கும் ஒழுக்கத்தினையுடைய முல்லைக் கொடிபடர்ந்த அழகிய காட்டிடத்தேயுள்ளது. அங்கே பசுத்த அரும்புகளையுடைய அவரை, பவழம்போலப் பூக்களைத் தொடுத்து நிற்கும். கரிய சுரும்பினையுடைய காயாக்கள் திரண்ட மயிலின் கழுத்துப்போலப் பூவா நிற்கும். கொழுங்கொடி முசுண்டை கொட்டம் போலும் பூவை ஏந்தி நிற்கும். கொல்லையிடத்து நெடிய வழிகளிலே இந்திர கோப மூரா நிற்கும். முழஞ்சுகளிலே குதிக்கும் அருவியினையுடைய பெரிய அத்த கிரியிலே ஞாயிறு மறைந்து, அவன் கிரணங்கள் போன அந்திக் காலத்தைப் பார்த்து அவ்வேலூர் சேரின், எயிற்றியர் அட்ட இனிய புளிங்கறியிட்ட வெவ்விய சோற்றையும் ஆமானினது சூட்டிறைச்சியையும் நீவிர் பெறுவீர். தேமாவின் தளிர்போன்ற மேனியையும், சிலவாகிய வளையினையுமுடைய நும்மகளிர் கிளைஞருடனே யாவரும் அவற்றைப் பசிகெட உண்பீர்.

அதன் பின்னர், அவனது ஆமூரைச் சேர்மின், அவ்வூர் ஊடியும் கூடியும் போக நுகரும் தன்மையமைந்த மருத நிலத்தில் குளிர்ந்த வயலிடத்துள்ளது. அழகிய தண்ணிய கிடங்கினையும், அரிய காவலையுமுடையது.

புலவர் சரித்திரம்

அகத்தியர்:—அகத்தியரது வரலாறு காலம் முதலிய வற்றை வரையறுத்துக் கூறும்வகை சிறிதும் இல்லா தொழியினும், கர்ணபரம்பரையாகச் சிற்சில கதைகள் வழங்குகின்றன. அகத்தியர், இமயமலைக்கும் விந்திய மலைக்கும் இடையில் உள்ள ஆரியாவர்த்தம் என்னும் தேசத்தில் இருந்தவர். இவர் விதர்ப்பநாட்டின் மன்னன் மகளாகும் உலோபாமுத்திரை என்பவளை மணந்து சித்தன் என்னும் ஒரு மைந்தனைப் பெற்றனர் என்ப. இவர் முதற் சங்கத்துப் புலவர்கள் ஐந்நூற்று நாற்பத் தொன்பதின்மரில் ஒருவர் என்பது இறையனா ரகப் பொருளுரையிற் காண்க.

"தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என மூன்று சங்கம் இரீஇயினர் பாண்டியர்கள். அவருள், தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும், குன்றெறிந்த முருகவேளும், முராஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின்கிழவனுமென இத் தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்ம ரென்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற் பத்தொன்பதின்மர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப் பட்டன எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும் முதுகுருகும், களரியாவிரையுமென இத்தொடக்கத் தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தா ரென்ப. அவர்களைச் சங்க மிரீஇயினர்

காய்சினவழுதி முதலாகக் கடுங்கோ னீறாக எண்பத்தொன்பதின்ம ரென்ப. அவருட் கவியரங்கேறினார் எழுவர் பாண்டிய ரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை யென்ப. அவர்க்கு நூல் அகத்திய மென்ப.

இனி இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், இருந்தையூர்க் கருங்கோழியும், மோசியும், வெள்ளூர்க்காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக்கோமானும், கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்ம ரென்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்தெழுநூற்றுவர் பாடினா ரென்ப. அவர்களாற் பாடப்பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலை யகவலு மென இத்தொடக்கத்தன என்ப, அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும், இசைநுணுக்கமும், பூதபுராணமு மென இவை யென்ப; அவர் மூவாயிரத்தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தா ரென்ப; அவரைச் சங்கமிரீஇயினார் வெண்டேர்ச்செழியன் முதலாக முடத்திருமாற னீறாக ஐம்பத்தொன்பதின்ம ரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப. அக்காலத்துப் போலும் பாண்டியனாட்டைக் கடல் கொண்டது.

இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியாரும், சேந்தம்பூதனாரும், அறிவுடையரனாரும், பெருங்குன்றூர்க்கிழாரும், இளந்திருமாறனும், மதுரையாசிரியர் நல்லந்துவனாரும், மருதனிளநாகனாரும், கணக்காயனார்மகனார் நக்கீரனாரு மென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்ம ரென்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினா ரென்ப; அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகைநானூறும், குறுந்தொகை

நானூறும், நற்றிணை நானூறும், ஐங்குறு நூறும், பதிற்றுப் பத்தும், நூற்றைம்பதுகலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையு மென்று இத் தொடக்கத்தன; அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமு மென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத் தெண்ணூற் றைம்பதிற்றியாண் டென்ப; அவர்களைச் சங்கமிரீஇயினர் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்ம ரென்ப; அவருட் கவியரங்கேறினர் மூவர் பாண்டிய ரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்நதது உத்தரமதுரையென்ப."

புராணக்கூற்று. முன்னொரு காலத்தில் இமய பருவதத்தில் சிவபெருமானுடைய திருக்கலியாணத்தை முன்னிட்டு, இந்திரனும், சந்திரனும், மலாயனும், மாலும், தேவர்கள் யாவரும் சனகர் முதலிய அரிய முனிவரும், வித்தியாதாரும், சித்தரும் நெருங்கியிருந்தனர். இவ்வுலகு. பொறையாற்றுது வடகீழெல்லை தாழ்ந்தது. தென்மேற்கெல்லை உயர்ந்தது. அப்பொழுது தேவர்கள் அஞ்சி சிவபெருமானை வணங்கி "ஐயனே! நின்னையொப் பாரொருவனைத் தென்மேற்கெல்லையில் வாழ ஏவினால் வையம் நேர்நிற்கும்" என்று குறையிரந்தார்கள்.

அதற்குச் சிவபிரான், "தேவர்காள், அகத்திய முனிவனே எம்மைப்போன்றவன். அம்முனிவரன் இல்வாழ்க்கைக்குரியளாகிய உலோபாமுத்திரையென்பவள் உமையை யொப்பவள்" என்று அனுப்பினபோது, இவர் வட நாட்டிலிருநது தமிழ் நாட்டிற் குடியேறியவர். இது, 'பைத்தலை புரட்டு முந்நீர்ப் பௌவமுண் டவனே யெம்மை யொத்தவ னனையான் வாழ்க்கைக் குரியளா இயவுலோபா முத்திரை யிமவான் பெற்ற முகிழ்முலைக் கொடியொப் பாளென்

றத்திரு முனியை நோக்கி யாயிடை விடுத்தா யன்றே'
என்பதனால் நன்கு விளங்கும்.

அன்றியும் இவர் சிவபெருமான்பால் விடைபெற்றுச் செல்லும்போது, "ஐயனே! அடியேன் செல்லும் நாடு தொடைமணக்குந் தமிழ் நாடாகையால் அந்நாட்டு மாந்தரெல்லாம் தமிழ்நூலை ஆராய்ந்து அந்நூற்கேள்வி நிரம்பியவர்கள் என்று கேள்வி யுற்றிருக்கின்றேன். ஆதலின் அடியேன் அன்னார் கேட்கும் வினாக்களுக்கு அமைய விடை கூறவேண்டும். இறைவனே! அடியேனுக்கு அந்தச் செந்தமிழ் இலக்கண நூலினை அருளிச் செய்ய வேண்டும்," எனக் குறை யிரந்தார். அப்படியே சிவபெருமான் அம்முனிவரன் தெளியத் தமிழிலக்கண முதனூலை அருளிச்செய்தார். இவர் அதனைத்தேர்ந்து பின்னும் சிவபிரானை நோக்கி, "முடிவிலா முதல்வ! அடியேன் எப்பொழுது மீட்டும் நின் திருவடியைத் தரிசிப்பேன்?" என்று வேண்டினார். அதற்குச் சிவபிரான் "அன்பனே, திருவாலவாயில் எம்மைக் கண்டு வணங்கி நீ விரும்பியவற்றையெல்லாம் பெற்று, பொதிய மலையிலிருக்கக் கடவாய்," என்று ஏவினார்.

அப்படியே இவர் தமது தேவியாராகிய உலோபாமுத்திரையோடு தென்மேற்கெல்லையை அடைந்து திருவாலவாயைத் தரிசித்துப் பொதியமலையில் வசித்தார். இது,

"கடம்பமா வனத்தி லெம்மைக் கண்டனை யிறைஞ்சி யுள்ளத்,
திடம்பெற யாது வேட்டா யவையெலா மெம்பாற் பெற்றுத்
திடம்பெற மலயத் தெய்தி யிருக்கென விடுத்தா யென்று
குடம் பெறு முனியு மங்கே யிருக்கின்றான் கொடியி னோடும்'
என்பாதல் தெளிவாகும்.

இவர் வசிஷ்டன் முதலிய முனிவர்களுக்குத் திரு வாலவாய் மான்மியத்தைக் கூறி முடித்து, சிவபெருமானை அருச்சித்து வணங்கினபோது, அவர் இவரை நோக்கி, "நீசெய்தபூஜை எமக்கு ஆனந்தமாயிற்று," என்று திருவருள் சுரந்து இவரை அருகழைத்துத் தமது செங்கையை இவர் தலைமீதுவைத்து, முதுகைத்தடவி, 'நீ எமையொப்பாய்; நினதுகற்புடைய பூங்கொம்புபோல்ப வளான உலோபாமுத்திரை உமை யொப்பாள். ஆகையால் உம்மையொப்பார் உலகத்தில் ஒருவருமிலர். நிறை தவத்தைச் செய்தோனும் நீயே; தவவுறுதி பெற்றோனும் நீயே. ஆதலால், இவ்வுலகில் உனக்கரிதாய் ஒன்றுங் காணோம்,' என்றருளிச் செய்தார் என்பதனால், இவருடைய ஈசுவரபக்தியும், தவவலிமையும் நன்கு விளங்கும். இது;

'சிறந்தவருள் சுரந்துகுறு முனியைவரு கென்றுகரஞ் சிர
மேல் வைத்துப்
புறந்தடவி யெமையொப்பாய் நீயேநின் கற்புடைய பொலங்
கொம்பன்ன
ளறந்தழையு முமையொப்பா ளாதலினா லுமையொப்பா ரகிலத்
தியாரே
நிறைந்ததவம் புரிந்தோனுந் தவத்துறுதி பெற்றோனு நீயே
யன்றோ,'

என்பதாற் பொருந்தும்.

அகத்திய முனிவர் காசியம்பதியி லிருந்த வடமொழி வாணரோடு மாறுபட்டு, அம்மொழிக்கு இணையான மற்றொன்றினை யருளுமாறு முருகக்கடவுளை இரப்ப, அக்கடவுள், இவ்விரக்கம் அறிவின்பாலதாகலின் இவற்கருள் செய்தும் எனத்திருவுளங் கொண்டு, ஓர் இடத்தைச் சுட்டி, "அன்ப! அம்மூலைக்கண் உள்ளது; சென்று

கொள்க'' எனலும், முனிவரர் விரைந்தோடி "தமிழ்! தமிழ்'' எனக்கூவி அவ்வேராலைச்சுவடிகளை வாரிக்கொண்டு வெளிப்போந்து, முருகக்கடவுளை வணங்கி விடைபெற்று, தமிழ்மொழியை இவ்வுலகின்கண நிலவவைத்தனர் என்ப

குறுமுனி, கும்பமுனி, கலசமுனி, கும்பசம்பவர் முதலிய வேறு பல பெயர்களும் இவருக்குண்டு. வரை துறையின்றிக் குவிந்து கிடந்த தமிழ் இலக்கியங்களை யெல்லாம் வகைப்படுத்தித் தமிழுக்கு முதன்முதல் இலக்கண வரையறை செய்தவர் இவரே என்பர். இவர் செய்த இலக்கணநூல் அகத்தியம் எனப்படும். அது பேரகத்தியம் சிற்றகத்தியம் என இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அது பதினையிரத்தின் மிக்கசூத்திர முடையதெனவே இயல், இசை, நாடகமாய முப்பெருந் தமிழுக்கும் இலக்கணம் வகுத்தாராதல் வேண்டும். அத்தகையு அரிய பெருநூல் இறந்துபட்டது நம் தமிழ்மக்கள் செய்த தவக்குறையே. அந்நூல் முழுவதும் இப்பொழுது கிடைக்கவில்லை. அகத்தியச் சூத்திரங்களாக வழங்கிவரும் சில சூத்திரங்களைச் சேர்த்துப் பேரகத்தியத்திரட்டு எனப் பெயரிட்டு ஒருநூல் பதிக்கபபட்டுள்ளது. இவ் வகத்தியத்தையன்றி இன்னும் பலதுறைப்பட்ட பலநூல்கள் அகத்தியர் பெயரால் உலவுகின்றன. அவை எண்ணிலடங்கா. அவற்றுள் அடங்கியன அகத்திய சம்மிதை என்னும் வைத்திய வடநூல், அமுதக்கலைக்யானம், அவிழ்த சாரம், இரத்தினச் சுருக்கம், கன்மகாண்டம், குணவாகடம், குருநாடிச்சூத்திரம், சங்குசுத்தி, செந்தூரமுறை, நோயின்சாரம் முதலிய தமிழ் மருத்துவ, சோதிட ஞானநூல்களாகும். இவை உண்மையில் அகத்தியனுரால் இயற்றப்பட்டன என்பதற்குத் தக்க ஆதாரம் ஒன்றும் இல்லை. இவரிடம் தமிழ்கற்ற மாணவர்கள் பன்னிரு

வர். அவராவர்: தொல்காப்பியன், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரன்; கழாரம்பன், அவநயன், காக்கைபாடினி, நத்தத்தன், வாமனன் என்போர். இவர்கள் பன்னிருவரும் சேர்ந்து புறப்பொருள் பன்னிருபடலம் என ஓர் நூல் செய்துள்ளார்கள். சிலர் தனித்தனியேயும் நூல் இயற்றியிருக்கின்றனர். இவர் காலம் சரித்திரகாலத்துக்கு முற்பட்டது.

இனி, அகத்தியச் சூத்திரங்களெனச் சிதைந்து ஆங்காங்குச் சில வழங்குவனவாயின. அவற்றிற் சில சூத்திரங்களை வித்வான் —களத்தூர் —வேதகிரிமுதலியார் சுமார் அறுபது யாண்டுகளுக்கு முன்னர் வெளியிட்டனர். சில, தொல்காப்பியம் நன்னூல் முதலிய இலக்கண உரைகளிலும் காணபபடுகின்றன. வேதகிரி முதலியார் தம்மிடத்து மூவாயிரம் சூத்திரங்கள் கிடைத்துள்ளனவென்று சொல்லி நூற்றறுபத்தைந்து சூத்திரங்களை வெளியிட்டனர். மற்றைச் சூத்திரங்களும் கிடைக்குமென்று பலகாலும் பல்வேறிடங்களிலும் முயன்றும் கிடைத்தில. பின்னும் பதினாறு சூத்திரங்கள் கிடைத்தன.

கிடைத்த மட்டில் இந்நூலின் சூத்திரங்களின் அமைபபை உற்று நோக்குழி இது அகத்தியனார் செய்ததென்பதற்கு மேற்கண்ட வேதகிரி முதலியார் கூற்றேயன்றி வேறு ஆதாரவுகிடைத்திலது. அகத்தியம் என்னும் நூல் ஒன்று நிலவுகின்றது என்று எண்ணியிருப்பார்க்கு மனவமைதியுண்டாமாறு அதனை வெளியிடலானோம். இச்சூத்திரங்களுக்குத் தெள்ளிதிற் பொருள் விளங்குமாறு உதாரணங்களுடன் ஓர் உரையும் வரைந்துள்ளோம்.

மற்றும் இந்நூலை அச்சிட முயன்றுவருங் காலத்தே வேறு சூத்திரங்கள் அடங்கிய சில பிரதிகள் கிடைத்தன. அவற்றுள் ஒன்றின் தலைப்பில் "அகத்தியத் தருக்க சூத்திரம்" என்று வரையப்பட்டுள்ளது. இப்பிரதியிற் கண்ட இருபது சூத்திரங்களும் தருக்கத்தின்பாற்படுவன.

ஆகையால் இவ்வகத்திய சூத்திரங்களோடு பிற்கூறிய தருக்க சூத்திரங்களையும் முறையே ஈண்டு எழுதுவாம்.

அகத்தியத் திரட்டு I.

இலக்கியம்.

1. இலக்கிய மென்ப திலக்கணச் சான்றாய்
வழங்கியவ் விலக்கண மயங்கிய தாமே.

இலக்கணம்.

2. இலக்கண மென்ப திலக்கிய முறையுற
வைத்த தென்று வழங்கப் படுமே.

3. இலக்கிய மின்றி யிலக்கண மின்றே
எள்ளின் றாகி லெண்ணெயு மின்றே
எள்ளினின் றெண்ணெ யெடுப்பது போல
இலக்கி யத்தினின் றெடுபடு மிலக்கணம்.

இலக்கணலக்கியம்.

4. பூவினுள் வாசம் பொருந்துதல் போல
இலக்கண விலக்கிய மியைபுடைத் தாகும்.

அளபெடை.

5, அவையே,
இயற்கை செயற்கை யின்னிசை சொல்லிசை
நெடில்குறி லொற்றுயி ரெழுத்துப்பே றளபெடை.

இயற்கை யளபெடை இசை, விளி, பண்டமாற்று முதலியவற்றில் வருவது. செயற்கை யளபெடை சீருந் தளையும் வேண்டுமிடத்துப் புலவனாற் செய்து கொள்ளப் படுவது. இன்னிசை யளபெடை இனிய இசை காரண மாக வருவது. சொல்லிசை யளபெடை சொல்லின் இசை கெடாமை காரணமாக [illegible] வருவது.